மலரும் மஞ்சரம்



கவிஞர் முருகு சுந்தரம்

மலரும்
மஞ்சமும்

கவிஞர்

முருகு சுந்தரம்

அம்மன் புக் கம்பெனி
18, இராஜ வீதி,
கோவை - 641 001.

முதற் பதிப்பு : நவம்பர், 85

(C) சிவகாமி

தயாரிப்பு : S. R. K. மூர்த்தி

விலை ரூ. 8 - 25

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெஸண்ட் சாலை,
இராயப்பேட்டை
சென்னை - 600 014.

இது ஒரு கனவில்லாத
கரும்புநூல்: குடும்பவாழ்க்கையில்
காதல் எவ்வாறு உயிர்ச்சக்தியாகவும்,
ஊட்டச் சக்தியாகவும், ஊக்கச்
சக்தியாகவும் விளங்குகிறது
என்பதைத் தமது பளிங்கு
நீரோட்ட நடையால்
படைத்திருக்கிறார் கவிஞர் முருகு
இதைத் தமிழ் இலக்கியச்
சுவைஞர் திருமுன் படைப்பதில்
மகிழ்ச்சியடைகிறோம்.

—பதிப்பகத்தார்

சிலசொற் கேளீர்

"காதல்தான்—
மிகச் சக்திவாய்ந்த
பழம்பெரும் கடவுள்,

வீணர்களையும்
தம் காதலியர் முன்னால்
வீரர்களாக மாற்றும் ஆற்றல்
காதலுக் குண்டு.

காதலர் அடங்கிய
படையொன்றை
என்னிடம் தாருங்கள்;
நான் உலகையே
வென்று காட்டுகிறேன்"—என்று

ஃபேத்ரஸ் (Phaedrus) என்ற அறிஞர்
குறிப்பிடுகிறார்
'கண்ணின் கடைப்பார்வை'
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் ஓர்கடுகாம்!

ஊக்கச் சக்தியின்
'மெகா வாட்' அளவு
பாவேந்தரால்
இங்கு பேசப்படுகிறது.

காதலினால் மானுடர்க்குக்
கலவி உண்டாம்
கலவியிலே மானுடர்க்குக்
கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக்
கவிதை உண்டாம்;
கானமுண்டாம்; சிற்பமுதல்
கலைகள் உண்டாம்—என்று
பாரதியார் பாடுகிறார்.

'உலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாகவும்' ஊக்கச் சக்தியாகவும் விளங்குவது காதலுணர்வே' என்ற சிக்மண்ட் ஃப்ராயடின் கொள்கையோடு மேலே கூறப்பட்ட பாரதி பாடல் ஒத்துப் போகிறது.

காதல் என்பது—
உடலுறவை மட்டுமே
நோக்கமாகக் கொண்டதன்று.
அதற்கு—
விரிவான பரிமாணங்கள் உண்டு
ஒருவர் கண்ணில்
ஒருவர் கண்ணையிட்டு,
உள்ளமும் உடம்பும் சூடேறப்
பார்த்துக் கொண்டிருப்பதன்று காதல்.

இருவர் பார்வையும் இணைந்து
ஒரே திசையில் பார்ப்பதுதான்
உயர்ந்த காதல்.

காதலைச்
சலிப்பில்லாமல் சுவைப்பதற்கு
ஒரு பக்குவம் வேண்டும்;
அந்த உளப்பக்குவம்
வாய்க்கப் பெற்றவர்கள்
கொடுத்து வைத்தவர்கள்.

கல்வியறிவும்
கலையுணர்வும்
ஒருங்கே வாய்க்கப்பெற்ற
காதல் வாழ்க்கை
ஒரு தேன்கூடு;
வாடாத வசந்தம்;
முரண்பாடு மிக்க
காதல் வாழ்க்கை
முட் புதர்!

பட்டமும் பதவியும்
வீட்டுக்கு வெளியில்தான்.
வீட்டில்—
ஆடவனுடைய பதவி 'கணவன்'
பெண்ணின் பதவி 'மனைவி'
அந்தப் பதவிக்குரிய கடமைகளை
உள்ள நிறைவோடு செய்யும்போது
வீடு சொர்க்கமாகிறது.

சீரான பொருளாதாரம்,
காதல் வாழ்வை
ஒரே சீராக வைத்துக்கொள்ள
உதவும் 'ரெகுலேட்டர்'
பொருளாதாரம் வாடும்போது
காதலும் வாடுகிறது.

முதுமையில்—
காதல் சருகாவதில்லை;
கனிந்த பழமாகிறது.
'காதலினால்—
சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே
மரணம் பொய்யாம்'—என்ற
பாரதியின் கூற்று
முற்றிலும் உண்மை.
அம்காபதியும் அமராவதியும்
கயசும் லைலாவும்
ரோமியோவும் ஜூலியத்தும்
இன்றும்—
நம்மிடையே வாழ்கின்றார்கள்.
என்றும்—
நம்மிடையே வாழ்வார்கள்.

ஈரோடு
1-5-85

முருகு

பேழைக்குள்

1.	மலரும் மஞ்சமும்	9
2.	மலரினும் மெல்லிது காமம்	15
3.	மென்தோள் துயில்	24
4.	புன்னகை அரும்புகள்	31
5.	நண்டு மிதித்த அத்திப்பழம்	41
6.	கள்ளும் காமமும்	47
7.	கண்களும் கனவுகளும்	58
8.	அடிசிற்கு இனியவள்	66
9.	அமிழ்தினும் இனியது	78
10.	அடக்கிப்பார் அல்லது அடங்கிப்போ	83
11.	அந்தி மலர்கள்	91

1. மலரும் மஞ்சமும்

அன்று முதலிரவு !

வாழ்க்கை இளவேனிலின் புதிய பூங்கொத்துகள் மலர்ந்து மணம்பரப்பும் தேனிரவு !

அவன் அழகன்; அம்பிகாபதியைப்போல !

தமிழினத்திற்கே இயல்பான மாநிறம் அவன் மேனி !

அவன் அசைவும் பார்வையும், அத்துமீறிய அவன் ஆண்மைக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.

சாய்வு நாற்காலி, துடிக்கும் அவன் இளமையைத் தாலாட்டிக் கொண்டிருந்தது.

அவன் கையில் திருக்குறள்.

நூலை எடுத்தவுடன் முக்கால் பகுதியை வேகமாகத் தள்ளிவிட்டுக் கடைசிப் பக்கங்களைக் குறு குறுப்போடு அவன் கைகள் புரட்டிக் கொண்டிருந்தன.

அவன் விரும்பும் ஏதோ ஒன்றை அப்பக்கங்களில் ஆர்வத்தோடு தேடிக்கொண்டிருந்தான் போலும் !

அவன் அப்பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தானே தவிர, ஏனோ படிக்கவில்லை.

விட்டு விட்டு ஒலித்த கிரீச்......கிரீச்...ஓசையுடன் கொஞ்சங் கொஞ்சமாகக் கதவு திறந்தது.

அவன் ஆழ்ந்து படிப்பதுபோல் பாசாங்கு செய்தான்.

* * *

நிலவு எப்போதும் மலைக்குப் பின்னால் இருந்துதான் எட்டிப் பார்ப்பது வழக்கம். ஆனால் இன்று கதவுக்குப் பின்னால் இருந்து ஒரு சதை நிலவு எட்டிப் பார்த்தது! ஒரு கொடித்தேர் மெதுவாகக் குலுங்கிவந்து முன்னால் நின்றது.

அவள் விரல்கள் நடுங்கின; என்றாலும் நடுக்கத் தோடு நாகரிகமாகக் கதவைத் தாளிட்டாள்.

அவள் கையில் பழத்தட்டு!

அந்தியில் தோன்றும் சிவந்த பிறை நிலவைப் போலக் குடகுமலைக் கிச்சிலிப் பழத்தின் உரித்த சுளைகள் அத்தட்டில் படுத்துக் கொண்டிருந்தன.

குங்குமப்பூ மிதக்க, ஏலமும் சருக்கரையுமிட்டுக் காய்ச்சிய பசும்பால் குவளையில் குந்திக் கொண்டிருந்தது. எங்குக் கட்டில் முணகுமோ என்று அச்சப்படுபவள்போல் மெதுவாக அமர்ந்தாள்.

* * *

அவன் சிரித்தான்; அவளும் சிரித்தாள்.

ஆனால் —

ஏன் சிரித்தோம் என்று இருவருக்குமே புரியவில்லை.

காங்கயம் மாடுகளைப் போல்.

திருமணச் சந்தைக்காக அவர்கள்.

இணை சேர்க்கப்பட்டவர்கள் அல்லர்.

காதலித்து மணம் செய்துகொண்டவர்கள்.

களவியல் கொம்பில் ஏறி, அந்த அணில் ஏற்கனவே அப்பழத்தைக் கொஞ்சம் கொரித்திருந்தது.

என்றாலும் — அவள் கொய்யாக்கனிதான்.

அவள் கண்ணில் நாணம் மட்டும் இருந்தது; மருட்சி இல்லை!

* * *

அழகு கொலுவிருக்கும் அம்மஞ்சத்தை,

அவன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன் கட்டிலை அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள், எதையாவது பேசி அந்த இறுக்கத்தைச் சற்றுத் தளர்த்தும் நோக்கொடு.

"எனக்கு இலக்கியக் கட்டில்கள் நினைவுக்கு வந்து விட்டன. 'சரக்கொன்றைத் தொங்கலிட்ட பந்தலின் கீழ், தனிச்சிங்கக் கால் நான்கு தாங்கும் கட்டில்' என்றார் பாவேந்தர்" — என்றான் அவன்.

"இல்லை...இது காட்ரேச் கட்டில்" — என்றாள் அவள். 'கோவலனும் மாதவியும் படுத்திருந்த கட்டிலில் ஒன்றன் மேல் ஒன்றாக ஐந்து மெத்தைகள் போடப்பட்டிருந்தனவாம். செம்பஞ்சு, வெண்பஞ்சு, சிறுபூளை, சேணம், அன்னத்தின் தூவி......" என்றான் அவன்.

"நமக்கு ஒன்று போதும்!" என்று கூறிச் சலங்கைச் சிரிப்பை உதிர்த்தாள் அந்தச் சந்தனச் சிலை.

* * *

அந்தியில் அவள் கூந்தலில் ஏறிய மல்லிகை மொட்டுகள் மணம் பேச வாய்திறந்து கொண்டிருந்தன.

"மலரும் மங்கையும் ஒன்று" என்றான் அவன்.

"எப்படி?" என்று விழிகளை அவள் வினாக் குறியாக்கினாள்.

"பூப்பு...என்பது பூவுக்கும் பூவையருக்கும்தானே?" என்று கண்ணால் சிரித்துக் கொண்டே சொன்னான் அவன்,

"குறும்...பூ!" என்று கூறித் தலை குனிந்தாள், தாமரை மொட்டுப்போல.

"எந்தப் புலவனும் மலரை நினைக்காமல் மங்கையை நினைப்பதில்லை. வள்ளுவர் கூட ஒரு முறை கூறுவதில் நிறைவு பெறாது, 'மலரன்ன கண்ணாள்...மலரன்ன கண்ணாள்' என்று காமத்துப் பாலின் இரண்டு முறை பாடிக் 'கூறியது கூறல்' என்னும் குற்றத்துக்கு ஆளாகிறார்'' என்றான் அவன்.

''ஏன்? ஆண்கள் மலருக்கு ஒப்பிடப் படுவதில்லையா? வள்ளுவர் கூடத் திருமாலைத் 'தாமரைக் கண்ணான்' என்றுதானே குறிப்பிடுகிறார். கம்பன் கூட இராமனை ஓரிடத்தில் குறிப்பிடும்போது 'செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினேடும் வந்தான் வல்வில் இராமன்' என்று தானே பாடுகிறான்?'' — என்று கேள்விக் கணை தொடுத்தாள் அக்கிள்ளை மொழி.

''பெண்களின் முகத்துக்குத் தாமரையும், முறுவலுக்கு முல்லையும். முத்தவாய்க்கு முருக்கம்பூவும், நீள்விழிக்கு நீல மலரும், கைக்கு அல்லியும், காதுக்கு வள்ளையும், மூக்குக்கு எட்பூவும் இலக்கியத்தில் நிலைத்த உவமைகளாகிவிட்டன, ஏன்? சில புலவர்கள் அரும்புகளைக் கூட விட்டு வைக்க வில்லை, ஆகையினால் தான் ஒரு பிரப்பந்தப் புலவன்—

''பூவெல்லாம் தன்னிடத்தே பூத்திருக்கப் பார்த்திருந்தும் காவெல்லாம் சென்று சென்று கால்நோகப் பூவெடுத்தாள்'' என்று கற்பனை நயத்தோடு பாடுகிறான்'' என்று ஒரு சொற்பொழிவே நிகழ்த்தினான் அவன்.

''ஆனால் ஒன்று மட்டும் மறுக்கமுடியாத உண்மை, மலர், கொடியிலோ அல்லது செடியிலோ இருக்கும் வரையில் தான் அதற்குச் செழிப்பு, வனப்பு எல்லாம். பிறர் கைப்பட்ட வுடனே அதற்கு வாட்டந்தான். பெண்ணுடைய நிலையும் அப்படித்தானே! ஆடவன் கை ஒரு பெண் மீது என்று படுகிறதோ, அன்றிலிருந்து அவள் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் மெருகு குலைந்து வாடத் தொடங்குகிறாள்'' என்று கூறிப் பெரு மூச்சு விட்டாள் அவள்.

''இக்கருத்தை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. ஆடவன் கை பட்டதும் பெண்ணுக்குப் புதுப் பொலிவு ஏற்படுகிறது'' என்றான் அவன்.

''நீங்கள் கூறும் அந்தப் புதுப் பொலிவு. செடியில் இருக்கும் மலர் மாலையாக மாறும்போது பெறும்மதிப்பைப் போன்றது. ஆனால் மாலையில் கட்டப்பட்ட மலர் அன்று மாலையே வாடி உதிர்ந்து விடுகிறதே!'' என்று கூறிச்சிரித் தாள் அவள்.

இலக்கியப் பேச்சு அவளுக்குச் சலிக்கத் தொடங்கியது; எழுந்து விளக்கை அணைக்கப்போனாள்.

அவன் சொன்னான்; 'வீணையை மீட்டும்போது விளக்கை அணைக்கக் கூடாது' என்று-

அவள் சட்டென்று திரும்பினாள். 'இந்த ஆடவர் களுக்குக் கொஞ்சங்கூட வெட்கமே கிடையாது' எனவெடுக் கென்று சொன்னாள்.

''ஏன் ஆண்டாளுக்கும் கூடத்தான் வெட்கமில்லை/' என்றான்.

எந்த ஆண்டாள்?' என்று கேட்டாள் அவள்,

'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள்தான்! என்றான் அந்தக் குறும்புக்காரன்.

'அவளை ஏன் இந்நேரத்தில் இங்கு வம்புக்கு இழுக்கிறீர்?' என்று பெண்ணுக்குரிய பரிவோடு கேட்டாள் அவள்

'அவள் பாடுகிறாளே!'

'என்ன! விளக்கு வேண்டும் என்றா?'

'ஆமாம்! பாட்டைக்கேள்' திருப்பாவைப் பாடினான் அவன்.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மீதேறித்
கொத்தமலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! ..

இங்குகூடப் பஞ்சயனந்தாள் ஐந்து மெத்தை...

"ஐயோ! போதுமே உங்கள் ஆராய்ச்சி! வந்து படுங்கள்!" சினத்தோடுசிணுங்கினாள் அவள்.

மேலே மங்கிய ஒளியோடு கண்சிமிட்டிக் கொண்டிருந்த மினுக்கு விளக்கு, அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண் டிருந்தது.

2. மலரினும் மெல்லிது காமம்

மாடியின் நிலா முற்றம்! கோடாக அரும்பி, கீற்றாகி, அரிவாளாக வளர்ந்து, ஓடமாகி, இன்று முத்தைப்போல் காட்சியளித்தது முத்து நிலா! அந்த மங்கிய ஒளியில் மல்லாந்து படுத்திருந்த அவன் உள்ளத்தில், சிந்தனைத் தேனீக்கள் இன்பத் தேனடைகளை நிரப்பிக் கொண்டிருந்தன.

எடுத்த அடிதோறும் கலீர் கலீர் என்று இசைப்போதை எழுப்பும் சதங்கை மிஞ்சியின் ஓசை!

அவள் படியேறி வந்துகொண்டிருந்தாள்; 'மலரினும் மெல்லிது காமம்...' அவன் வாய் அந்தச் சொற்களை அசைபோட்டுக் கொண்டிருந்தது.

காமமா! — அந்தச் சொல்லைச் சொல்லும் போதே ஒரு கரப்பான் பூச்சி முகத்தில் ஊர்வது போன்ற அருவருப்பு அவளுக்கு.

'ஏன்? காமம் என்ற சொல் காதில் விழுந்ததும் துத்திக் காய் போல முகத்தைச் சுருக்கிக் கொள்கிறாய்?' — என்றான் அவன். "பின் என்ன? 'காமுகன்' என்ற சொல் அத்து மீறும் ஆடவனைத்தானே குறிப்பிடுகிறது?" என்றாள் அவள்.

"உண்மைதான்! 'காமம்' என்ற தூய்மையான சொல்லைக் காலப்போக்கில் கேவலப் படுத்தி விட்டார்கள் இலக்கியவாதிகள். தொல்காப்பியரும், சுழகப் புலவர்களும் ஐந்திணை வழிபட்ட உயர்வான காதலைக் 'காமம்' என்றேகுறிப்பிட்டனர்" — என்று விளக்கினான் அவன்.

'இவ்வாறு கேவலப்படுத்தப்பட்ட வேறு சொல் ஏதாவது உண்டா?' என்று கேட்டாள் அவள்.

''உண்டு. 'முலை' என்ற சொல். கழகப் புலவர்கள் எந்தவிதக் கூச்ச உணர்வுமின்றி இயல்பாக இச்சொல்லைப் பாடலில் பயன்படுத்தி வந்தனர். ஆனால் காலப்போக்கில் இதுவும் கொச்சைப் படுத்தப்பட்டது'' — என்றான் அவன்.

''நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, புகழ் பெற்ற ஒரு தமிழ்ப் பேராசிரியர் அந்தச் சொல் வருமிடத்தில் எல்லாம் 'முகை' என்று மாற்றிப் படிப்பார். அச்சொல்லைக் கண்டாலே அவருக்கு நடுக்கம்! உடனே வகுப்பில் ஒரு சலசலப்பு! எல்லா மாணவருடைய கண்களும் எங்கள் பக்கம் கள்ளப்பார்வை பார்க்கும். பேசாமல் அந்தச் சொல்லை இருந்தபடியே படித்திருந்தால் அந்தச் சலசலப்பு ஏற்பட்டிருக்காது என்று நாங்கள் நினைப்போம்!'' — என்றாள் அவள்.

''பண்டைப் புலவர்கள் எல்லோரும் காமம் — காதல் என்ற இரண்டு சொற்களையும் எந்தவித வேறுபாடும் இன்றி உயர்ந்த பொருளில் கையாண்டனர். கடவுளுக்குக் கொடுக்காத சிறப்பைக் காமத்துக்குக் கொடுத்துப் போற்றினர்'' என்று கூறினான் அவன்.

''கடவுளை ஏற்றுக்கொள்ளாத நாத்திகர்களும், சில நாத்திக சமயங்களும் உண்டு. காதலை ஏற்றுக் கொள்ளாதார் யார்?'' என்று கூறி அவன் கூற்றை உறுதிப்படுத்தினாள் அந்த ஊற்று நிலா.

''காதல் என்பது ஒவ்வோர் உயிரிடத்திலும் தானாக ஊறிவரும் இயல்பூக்கம் (Instinct). எனவேதான் பாவேந்தர் பாரதிதாசன்—

காதல் அடைதல் உயிரியற்கை—அது
கட்டில் அடங்கிடும் தன்மையதோ?

என்று பாடினார். 'காதல் உணர்வு இல்லாதவன்' என்று ஒருவன் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டால் அவனை உலகம் ஐயக்கண் கொண்டு பார்க்கிறது'' என்றான் அவன்.

'பிறகு ஏன் காதலின்பத்தைச் 'சிற்றின்பம்' என்று சிலர் கூறுகின்றனர்?'' என்று கேட்டாள் அவள்.

''அது சுவைப்பவரின் திறமையைப் பொறுத்தது. இதுவே சிலருக்குப் பேரின்பமாகவும் இருக்கலாம். நீ எதிர் பாராத முத்தத்தைச் சுவைத்திருக்கிறாயா?'' என்று கேட்டான் அவன்.

''உங்களிடம்தான் அடிக்கடி சுவைக்கிறேனே!'' என்று கொவ்வை இதழ்களைக் குவித்துச் சொன்னாள் அந்தக் கோல மயில்.

''நான் என் முத்தத்தைச் சொல்லவில்லை; 'பாவேந்தரின் எதிர்பாராத முத்தத்தை'ச் சொன்னேன். அக்காப்பியத் தலைவி பூங்கோதை தன் காதலனுக்கு எழுதிய கடிதத்தில்

அத்தான்! என் ஆவி உங்கள்
அடைக்கலம்! நீர்ம றந்தால்
செத்தேன்! இஃதுண்மை. இந்தச்
செகத்தினில் உம்மை அல்லால்
சத்தான பொருளைக் காணேன்!
சாத்திரம் கூறு கின்ற
பத்தான திசை பரந்த
பரம்பொருள் உயர்வென் கின்றார்.

அப்பொருள் உயிர்க் குலத்தின்
பேரின்பம் ஆவ தென்று
செப்புவார் பெரியார் யாரும்
தினந்தொறும் கேட்கின் றோமே!

அப்பெரி யோர்க ளெல்லாம்
— வெட்கமாய் இருக்கு தத்தான்
கைப்பிடித் தணைக்கும் முத்தம்
ஒன்றேனும் காணார் போலும்!—

என்று சுவையுணர்வோடு பட்டறிந்ததைப் பாடுகிறாள். பற்றி அணைத்துப் பாவையர் பதிக்கும் சூடான முத்தம் ஒன்றாவது இந்தப் பக்தர்களுக்குக் கிடைத்திருந்தால் 'பேரின்பம்' என்று இறையின்பத்தைச் சொல்லமாட்டார் களாம். பூங்கோதைக்குக் காதல்தான் பேரின்பம்!'' என்று விளக்கினான் அவன்.

''ஏன் கடவுளின்பத்தைக் காதலின்பமாகக் கண்டவர் கள் இல்லையா?'' என்றாள் அவள்.

''உண்டு. மாணிக்கவாசகரும், ஆண்டாளும், திருமங்கை ஆழ்வாரும் காதலையே கடவுளாகக் கண்ட வர்கள்'' என்றான் அவன்.

''மலரினும் மெல்லிது காமம் — என்ற குறளடியை நீங்கள் அடிக்கடி புகழ்ந்து பாராட்டுகின்றீர்களே! அந்த உவமை எனக்குப் பொருத்தமாகப் படவில்லை. பலிபீடத் தில் தங்கள் ஆவியைப் பறிகொடுத்த அம்பிகாபதி — அமராவதி காதலையும், பாலைவனச் சூறைக்காற்றில் சின்னாபின்னப்பட்டுச் சிதறிப் போன கயசு — லைலாவின் காதலையும் மென்மையானதாக யார் நினைத்தார்கள்? அவ்வாறு நினைத்திருந்தால் அதன் குரல்வளையை இரக்க மில்லாமல் நெரித்திருப்பார்களா, பாவிகள்?... மேலும் மலர் ஒரு பருப்பொருள் (Concrete); காதல் ஒரு நுண்பொருள் (Obstract); இரண்டையும் ஒப்புமை காட்டுவது எவ்வாறு பொருந்தும்?'' என்றாள் அவள்.

''சிந்தனையின் ஆழத்தில் நீந்தும் புலவர் சிலர் உவமை களை இவ்வாறு நுட்பமாகக் கையாளுவதுண்டு. மேலோட்

டச் சிந்தனைக் காரர்களுக்கு இது விளங்காது. ஒரு சங்கக் காதலன் தன் காதலியின் அழகைத் 'தொண்டியன்ன நின் னலம்' என்று பாராட்டுகிறான். காதலியின் அழகு நுண் பொருள். காதலியின் அழகுக்குப் பருப் பொருளான ஒரு நகரத்தை உவமையாகச் சொல்லியிருப்பது மேலோட்ட மாகப் பார்த்தால் பொருத்தமில்லாமல் படலாம். ஆழ்ந்து ஆராயும்போது இந்த உவமையின் நுட்பம் புலப்படும். தொண்டி நகரின் பெருமிதமான தோற்றமும் திணைமயக்க அதன் செழித்த பரப்பும், அந்நகரின் செல்வ வளமும், சேரநாட்டில் அந்நகரின் வாய்த்த தலைமைச் சிறப்பும், அந்நகரின் இதயமான அரண்மனையில் அரசன் விரும்பிக் கொலுவிருக்கும் ஆட்சிச் சிறப்பும் அவளுடைய ஆற்றல் மிக்க அழகுக்கு ஒப்பிடப்படுகின்றன என்பதை உணரும் போது அந்த உவமையின் ஆழத்தையும் பரப்பையும் நம் மால் உணர முடிகிறது'' என்று விளக்கினான் அவன்.

'உண்மைதான், ஆங்கிலத் தாளிகையான 'இல்லஸ்ட் ரேடெட் வீக்லி ஆஃப் இண்டியா' வடநாட்டு இசைக்குயில் லதாவைப் பாராட்டி, ஒரு சிறப்பு மலர் வெளியிட்டிருந்தது அவ்விதழின் முகப்பில் அவள் படத்தைப் போட்டுக் கீழே Moon light in her throat என்று எழுதியிருந்தது. இனிய ஒலிக்குக் குளிர்ந்த நிலவொளியை உவமையாக கூறி யிருந்தது எனக்கு அப்போது பொருத்தமில்லாமல்பட்டது. இப்போது அந்த உவமையை வியந்து பாராட்டுகிறேன்'' என்று சிந்தனையோடு பேசினாள் அச் சோலையாழ்.

''இதுபோன்ற நுட்பமான உவமைகளை இன்று புதுப் பாடல் (Modern poems) எழுதும் பலர் கையாளுகிறார் கள்'' என்றான் அவன்.

''அது சரி! மலரைக் காதலோடு ஒப்பிடுகிறாரே வள்ளுவர். மலரைவிட மென்மையான பொருள் உலகில் வேறு எதுவும் இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''வள்ளுவர் எதையும் ஆழமாகச் சிந்திக்காமல் கூற மாட்டார். குறள் ஒரு பலாச்சுளை. அதில் சக்கையே கிடையாது. நீ கேட்பாய் என்று நினைத்துத்தான் வள்ளுவப் பெருமான் 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்று விளக்கினார். மோந்து பார்த்தால் வாடக்கூடிய பொருள் உலகில் வேறு என்ன இருக்கிறது மலரைத்தவிர?'' என்று கேட்டான் அவன்.

''எதுவுமில்லை; 'சிலரதன் செவ்வி தலைப்படுவார்' என்று குறிப்பிடுகிறாரே வள்ளுவர்! 'செவ்வி' என்ற சொல் எதைக் குறிப்பிடுகிறது?'' என்று வினவினாள் அந்த இன்ப வீணை.

''நல்ல கேள்வி கேட்டாய்! 'செவ்வி' என்பது வான வில் போன்ற ஒரு வண்ண வேறுபாட்டுச் சொல்; அழகு காலம், பருவம், தகுதி, ஏற்ற சமயம், காட்சி, புதுமை, மணம், சித்திரை நாள் என்று பல பொருளைத் தரும் ஓர் ஊற்றுச்சொல் அது. இந்தச் சொல்லுக்குச் சரியான பொருள் சொல்ல எல்லா உரையாசிரியர்களுமே திணறு கிறார்கள். பரிமேலழகர் 'தன்மை' என்று பொருள் செய் கிறார். பரிப்பெருமாள், என்ன பொருள் கூறுவது என்று புரியாமல் 'செவ்வி தப்பும்' என்று கூறி மழுப்பிவிட்டுப் போய்விடுகிறார். காலிங்கர் அச் சொல்லுக்குரிய பொரு ளைக் கூறாமல் படிப்பவர் சரியாகப் புரிந்து கொள்வதற் குரிய அழகான விளக்கத்தை மட்டும் கூறிச் செல்கிறார்'' என்றான் அவன்.

'என்ன அந்த விளக்கம்?' என்று கேட்டாள் அந்த ஏழிசை.

''உலகத்து வண்டானது மலர் சிதையாமல் மதுவை அருந்துவது போலக் காமத்தின் செவ்வி அறிந்து கைக் கொள்ளும் மக்களும் உலகத்துப் பலர் உளர்—என்பது காலிங்கர் கூறும் விளக்கம்'' என்றான் அந்த ஏந்தல்.

''விளக்கம் வியக்கத் தக்கதாக இருக்கிறது. இந்த உவமை விளக்கம் 'செவ்வி' என்ற சொல்லின் முழுமையை முப்பரிமாணத்தோடு நம் உள்ளத்தில் படம் பிடித்துக் காட்டிவிட்டது. 'காதலிப்பவரின் உள்ளம் சிறிதும் புண் படாத வகையில், காதலை நுகரும் நயத்தக்க நாகரிகமே செவ்வி' என்பதைக் காலிங்கர் எவ்வளவு நுட்பமாக விளக்குகிறார்! சரியான இலக்கைக் காலிங்கர் குறி தவறா மல் அடித்து விட்டார். என்றாலும் இவ்வளவு நாகரிக மான காதலன்—காதலியை நாம் எங்கு போய்த் தேடுவது? கழகக் காலக் காதலன் கூடப் பரத்தை...'' என்று இழுத்து மீட்டினாள் அவள்.

''பொறு. பரத்தைமை சங்க கால வாழ்வின் ஓர் அங்கம்; ஆனால் பரத்தமையே வாழ்க்கை அன்று. கழகக் காதலர்களில் 'செவ்வி' உணர்ந்து தலைப்பட்டார் சிலர் உண்டு'' என்று கூறி, இசைஞன் பாடுவதற்கு முன் இசை கூட்டுவது போல, அவன் நெற்றியைச் சுருக்கி நினைவைக் கூட்டினான்.

'எங்கே? அத்தகைய காதலன் ஒருவனை இலக்கியத்தில் காட்டுங்கள் பார்க்கலாம்?'' என்று கூறிச் சிரிப்பு மணியடித் தாள் அச் சேயிழை.

''ஏன் இல்லாமல்? அத்தகைய மென்மையான ஒரு காதலனைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ, பாட்டுப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு வந்து நிறுத்துகிறான். பொருள் தேடுவதற்காக அத்தலைவன் தலைவியைப் பிரிய உள்ளத் தில் நினைக்கிறான். தன் நோக்கத்தைத் தலைவியிடம் அவன் வெளிப்படுத்தவில்லை. என்றாலும் அவன் பிரியப் போகிறான் என்பதை—அவன் உள்ளத்து உணர்வோட் டத்தை—அவள் உய்த்துணர்கிறாள்.''

',அது எப்படி முடியும்? அவள் உள்ளத்தில் ஓடும் உணர்வை அவளால் எப்படி அறிய முடிந்தது?'

அதுதான் உயர்ந்த காதலின் தன்மை. அவர்கள் உடலால் இருவரானாலும் உயிரால், உள்ளத்தால் ஒருவரே. இந்த நுட்பத்தை உணர்ந்து தான் மற்றொரு கழகப் புலவன் "இருதலைப் புள்ளின் ஓருயிர்" என்றான்.

"என்ன?... என்ன?"

"இரண்டு தலையும் ஒரே உயிரும் உள்ள பறவையாம் உண்மைக் காதல்!"

"அப்பப்பா"

தன் தலைவன் பிரியப் போகிறான் என்பதை உய்த்துணர்ந்த அவள் ஒரு துன்ப ஓவியமாய் நிற்கிறாள். கண்ணில் நீர் நிறைந்து அவள் பார்வை நடுங்குகிறது. துன்பச் சுமையின் வெளிப்பாடாக, நெருப்புப் பெருமூச்சொன்று அவள் நெஞ்சத் துருத்தியிலிருந்து கிளம்பி மூக்கில் வெளிப் படுகிறது. அப்பெருமூச்சு அவள் மார்பில் அணைந்திருந்த குழந்தையின் மடிமீது படுகிறது. அப்பெருமூச்சின் வெப்பம் தாங்காமல் அக்குழந்தையின் தலையிலிருந்த செங்கழுநீர்ப் பூ வாடி உருக்குலைகிறது. இதைப் பார்த்த தலைவன், தலைவியின் ஆற்றாமையுணர்வைப் புரிந்து கொண்டு தன் பயணத்தைக் கைவிடுகிறான். எப்படி இந்த ஊமை நாடகம்?" என்று கேட்டான் அவன்.

"ஆகா! இவனல்லவா காதலன். நீங்களும் இருக்கிறீர்களே? நீங்கள் சில நாட்களில் உள்ளத்தையும் புண்ணாக்குகிறீர்கள்! உடம்பையும்......! என்றாள் அவள்.

"சரி சரி பாட்டைக் கேள்" என்றான் அவன்.

பரல்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் அறத்தா(று)
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா

ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்ந்த பனிநீர் நோக்கமொ(டு)
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே (அகம்-5)

என்று பாடி முடித்தான்.

''ஆமாம் இந்தப் பாட்டு எப்படி இன்னும் நம்மூர்த் திரைப் பட எழுத்தாளர்கள் கண்ணில் படாமல் இருக்கிறது பட்டால் விட்டு வைக்கமாட்டார்களே;........ .... ஐயையோ! இதென்ன; என்னை முகரத் தொடங்கிவிட்டீர்; முகர்ந்தால் மலர் வாடும் என்று இப்போது தானே சொன்னீர்!'' என்று முனகினாள் அவள்.

''வாடாமல் முகர எனக்குத் தெரியும்!'' என்று கண்களால் சிரித்துக்கொண்டு சொன்னான் அவன்.

3. மென்தோள் துயில்

"வாணியம்பாடியில் மூன்று புகைவண்டிகள் மோதிக் கொண்டன! இறந்தவர் எண்ணிக்கை இருபத்திரண்டாக உயர்ந்திருக்கின்றது." என்று வானொலி அழுதது.

இது போன்ற விபத்து விளம்பரங்கள் வானொலியில் வாரம் இரண்டு முறை வழக்கமாக ஒலிபரப்பாவதை அடிக்கடி கேட்டு 'த் சொ' என்று சப்புக் கொட்டுவது அவள் வழக்கம். ஆனால் இன்று அவள் சப்புக் கொட்டவில்லை தனது சந்தன மேனியில் தீப்பற்றியது போல் அலறினாள் ஏனென்றால் அவள் கணவனும் சென்னை சென்றிருந்தான்.

அந்த நாள் இரவு 10 மணி; பத்து நாள் நிலவு, முகில் மூக்காட்டுகள் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் தெருக் கதவின் மீது கை வைத்தான். 'திறந்தேன்' என்ற சொல் கேட்டது, மூன்று செயல்கள் ஒரே நொடியில் நிகழ்ந்தன!

அவள் விடை;

கதவு திறத்தல்;

ஒருவர் உடம்பில் ஒருவர் ஒடுங்குதல்!

உடம்பெல்லாம் கரும்பு போல் இனிக்கும் கட்டுண்ட சில கணங்கள்! மறக்க முடியாத சில மணித்துளிகள்!

'உணவு படைக்கட்டுமா? என்று கேட்டாள் அவள்.

'உணவைப் படைக்க வேண்டாம்; பரிமாறு' என்றான் அவன். சிறிது நேரம் நெற்றியைச் சுருக்கி நின்ற அவள், 'இரண்டுக்கும் என்ன வேறுபாடு' என்று கேட்டாள்.

'படைப்பதற்கும் பரிமாறுவதற்கும் பெருத்த வேறு பாடு உண்டு. பெரியோர்களுக்கு உணவிடுவது படைத்தல், கணவனுக்கு இடுவது பரிமாறுதல். ஏனென்றால் அருகிருந்து அன்பு மனைவி பரிமாறும் போது, அவர்களின் இருவரின் உணர்வுகளும், உணவோடு பரிமாற்றம் பெறுகின்றன என்று விளக்கினான் அவன். அவன் கூறிய நுட்பத்தைச் சுவையோடு புரிந்து கொண்டாள் அவள்.

உண்டு முடிந்ததும், இயல்பாகச் சிவந்திருந்த தனது உதடுகளைத் தாம்பூலத்தால் மேலும் சிவப்பாக்கிக் காட்டினாள் அவள்; அவன்' முத்தத்தால் இரத்தச் சிவப்பாக்கினான் அந்த இதழ்க் கோவைகளை.

"பாவேந்தரின் பாட்டு வரிகளை எடுத்துக்காட்டிக் காதலைப் பேரின்பம் என்று விளக்கினீர்கள் அன்று. இக் கருத்து வள்ளுவருக்கு உடன்பாடா" என்று ஐயவினாவை அவன் முன் வைத்தாள் அவள்.

உடன்பாடு இல்லாமலா

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு. —1103

என்று பாடுவார்? காதலின்பத்துக்கு மேலான, ஓரின்பம் இருக்கின்றது என்று கருதியிருந்தால், வள்ளுவர் வீட்டின் பத்தைப் (மோட்சம்) பற்றியும் பாடியிருக்க வேண்டும். "என்று விளக்கினான் அவன்.

"வள்ளுவப் பெருமான் காமத்துப் பாலையே பாடியிருக்க முடியாது; காமத்துப்பால் திருக்குறளின் பெருமையைக் குறைத்து விட்டது என்று திருக்குறள் பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட மேலை நாட்டுப் பாதிரியார் ஒருவர் எழுதியிருப்பதை நான் படித்தேன்" என்றாள் அவள்.

"தமிழ் இலக்கண இலக்கியப் போக்கை நாடித் துடிப் பறிந்து கற்காத குறை, வெளிநாட்டுக் காரரான அவரை

அவ்வாறு எழுதத் தூண்டியிருக்கிறது; மேலும் அவர் ஒரு துறவி'' என்றான் அவன்.

''காதலின்பம் தான் உலகில் உயர்ந்தது என்ற கருத்தை என்னாலும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடிய வில்லை...'' என்று கூறி அவன் முகத்தைக் குறிப்பாகப் பார்த்தாள் அவள்.

''காதலின்பம் உயர்ந்தது மட்டு மன்று; முழுமையான-ஐம்புலன்களும் ஒன்றித் துய்க்குப் இன்பம்—இதைத்தவிர வேறு எதுவும் இல்லை என்பதை வற்புறுத்த வந்த வள்ளுவர்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள—1101

என்று பாடி விளக்கினார். அதுமட்டுமன்று உலகம் ஒழுங்காக இயங்குவதற்குக் காதலின்பமே அடிப்படை.

''இன்று மக்களினம் பெற்றிருக்கும் இலக்கியம், கலை அறிவியல் போன்ற துறைகளின் வெற்றிக்குப், காதலின்பமே அடிப்படை என்பதை அறிவியலின் அடிப்படையில் விளக்கி யுள்ளார் சிக்மண்ட் ஃபிராய்டு என்ற மேதை'' என்றான் அவன்

''எப்படி'' என்றாள் அவள்.

வாழ்க்கையில் எத்துறையிலும் ஒருவன் வெற்றியடைய விரும்புவதும், புகழ்பெற விருப்புவதும், தான் விரும்பும் பெண்ணின் உள்ளத்தில் இடம் பிடிப்பதற்காகவும் அவளை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்காகவும் தான். உலகத்தின் தலை சிறந்த இலக்கியங்கள் யாவும் காதல் இலக்கியங்களே! 'நாயக, நாயகி பாவத்தில்' பாடும்போதுதான், பக்தி இலக்கியமே படிக்க முடிகிறது: திருப்பாவையையும் கண்ணன் பாட்டையும் ஏன் சுவைக்கிறோம்?

நம் நாட்டுக்கோவில்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் நம் நாட்டு நாட்டிய இசை அரங்குகள் ஆகியவற்றைக்

கூர்ந்து ஆராயும்போது, காதலுணர்வே அக்கலைகளின் அடிப்படை உந்துஆற்றலாக (Inspiration) விளங்குவதைக் காணலாம்.

ஏன்! போரில் உயிரைத் துச்சமாக மதிக்கும் வீரத்திற்கும் கூடக் காதல்தான் அடிப்படை.

காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே!

என்று பாரதி பாடவில்லையா?' என்றான் அவன்.

''பாவேந்தர் இன்னும் அழகாகப் பாடுகிறார்.

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டி விட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்கடுகாம்

என்று.

இன்றாலும் எனக்கோர் ஐயம். தாய்மை உணர்வையும் விடவா காதல் உணர்வு உயர்ந்தது? என்று கேட்டாள் அவள்.

''நல்ல கேள்விதான். தாய்மை உணர்வு தற்காலிகமானது. மகனாக இருந்தாலும் மகளாக இருந்தாலும் பருவமடைந்ததும் பெற்றோரை மறந்துவிட்டுக் காதலிப்பவரிடம் அன்பை மாற்றிக் கொள்கின்றனர். ஏன்! பெற்ற தாயைப் பாரமாக நினைத்து வெறுப்பவரும் உண்டு. அப்போது தாய்மையுணர்வும் வற்றிவிடுகிறது. ஆனால் காதல் உணர்வு நிலையானது'' என்றான் அவன்.

'முதுமைக் காலத்திலுமா?' என்று கேட்டாள் அவள். 'ஆமாம்' என்றான் அவன்

''நீங்கள் கூறும் விளக்கத்தைப் பார்த்தால் ஒரு பெண் தன் குழந்தையை விரும்புவது கூட, அக்குழந்தை தன் காதற்கணவன் கொடுத்த இன்பப் பரிசு என்ற காரணத்

தால் தான் என்று நினைக்கத் தோன்றுகிறது'' என்றாள் அவள்.

''உண்மைதான். அழகிய மலரும் வண்டும் காதல் வயப்பட்டுக் கூடுவதுதான் வாழ்க்கை. தாய்மை உடனிகழச்சி. இதே அடிப்படையைக் கொண்டதுதான், மக்கள் வாழ்க்கையும் இனப் பெருக்கமும். இனப்பெருக்கம் ஓய்ந்த முதுமையிலும், பருவத்தில் சுவைத்த காதலின்பத்தை அசை போட்டுக் கொண்டிருப்பது, பெரியவர்களின் பொழுது போக்கு!'' என்று கூறிப் புன்னகை செய்தான் அவன்.

''சரி! நீங்கள் கூறுவதுபோல் காதல் இன்பமே உலக வாழ்க்கையை இயக்கும் அடிப்படை ஆற்றல் என்றால், கடவுட் கொள்கைக்கும் நமக்கும் உள்ள தொடர்பு தான் என்ன'' என்று கேட்டாள் அவள்.

''இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை இன்பத்தைச் சுவைக்கும்போது யாரும் கடவுளை நினைப்பதில்லை. துன்பத்தால் துடிக்கும்போது, அத்துன்பச் சுமையை இறக்கி வைப்பதற்காக சுமைதாங்கிதான் கடவுள்!'' என்று விளக்கினான் அவன்.

''இக்கருத்தைப் பிறர் ஏற்றுக் கொள்வார்களா'' என்று கேட்டாள் அவள்.

''பிறர் ஏற்றுக்கொள்வதற்காக எதையும் கூறும் வழக்கம் எனக்கில்லை'' என்றான் அவன்.

''காதலின்பமே உலக வாழ்க்கைக்கு அடிப்படை என்ற இக்கருத்து மக்களுக்கு மட்டுமா? அல்லது மற்ற உயிர்களுக்கும் உண்டா'' என்று கேட்டாள் அவள்.

''எல்லா உயிர்களுக்கும் உண்டு. சங்க இலக்கியங்களில் இதற்கு நிறையச் சான்று உண்டு. ஒரு வறண்ட காட்டு வழியில் தலைவன் ஒருவன் பயணம் செய்து கொண்டிருக்கிறான். ஒரு சிறிய பள்ளத்தில் கலங்கலான கொஞ்சம் நீர்

மட்டும் இருக்கிறது, அதன் அருகில் ஒரு கலைமானும் அதன் பிணையும் நின்று கொண்டிருக்கின்றன. இரண்டுமே நீர் வேட்கையால் தவித்துக்கொண்டிருக்கின்றன. இரண்டுமே குடிப்பதற்காக அந்நீரில் வாயை வைக்கின்றன. ஆனால் ஆண் மான் குடிப்பதுபோல் பாசாங்கு செய்கிறது. ஏன்! மெண்மான் அந்நீரைப் பருகி வேட்கை தணிய வேண்டு மென்ற விருப்பத்தால்! ஆறறி வற்ற இவ்விலங்கின் அன்பு நெறிக்கு அடிப்படையாக விளங்குவது காதலுணர்வன்றி வேறு யாதாக இருக்க முடியும்?'' என்று கேட்டான் அவன்,

''சில கணவன் மனைவியரின் வாழ்க்கை போராட்டக் களமாகவே இருக்கின்றதே! அதைப்பற்றி என்ன கூறு கிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்,

''வாழ்க்கை என்பதே போராட்டம்தானே! அப் போராட்டத்திற்கு வறுமை, நோய், கொள்கை வேறுபாடு என்று பல காரணங்கள் இருக்கலாம். இக்காரணங்களை யும் மீறி அவர்களைப் பிரியாமல் பிணித்துவைத்திருப்பது தான் காதலுணர்வு. ஆங்கில எழுத்தாளன் டி. எச். லாரன்சு 'வாழ்க்கைப் புயல் (Mortal coil) என்று ஓர் உணர்ச்சி மயமான கதை எழுதியிருக்கிறான். அதை நீ படித்திருக்கிறாயா?''

''யார்? சட்டர்லீ சீமாட்டியின் காதலன் (Lady Chattarleys Lover) என்ற பரபரப்பான புதினம் எழுதினானே அந்த லாரன்சு தானே?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம் அவனேதான். வாழ்க்கைப் புயல் என்ற அக்கதையில் முரண்பாடு மிக்க இரண்டு பாத்திரங்களைக் காதலர்களாகப் படைத்திருந்தான் அவன், எதிலுமே ஒத்துப் போகாமல் ஒருவரை யொருவர் வெறுத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள் அக்காதலர்கள். திடீரென்று அவள் இறந்து விடுகிறாள். அவன் நடைப்

பிணம் ஆகிறான். இக்கதையைப் படிப்பவர்களுக்கு அவன் சாவு பெரிய புதிராகத் தோன்றும். ஆனால் கூர்ந்து சிந்திக்கும்போது அவர்கள் வெறுப்புகளையும், போராட்டங்களையும் மீறிக் காதலுணர்வு அவர்களைப் பிணித்துக் கொண்டிருந்தது என்பது புலப்படும்!" என்றான் அவன்.

"வள்ளுவர் காமத்துப்பாலை ஏன் இவ்வளவு சிறப்பாகப்பாடி வைத்திருக்கிறார் என்ற உண்மை இன்றுதான் எனக்குத் தெளிவாகி இருக்கிறது. வரம்புக்கு உட்பட்ட காதலுணர்வுதான் மக்கள் வாழ்க்கையின் அடைப்படை" என்றாள் அவள்.

"அக்காதல் உணர்வுக்கு ஊற்றாக, விளங்குபவர் பெண்கள். அவர்களிடத்தில் இயல்பாக அமைந்திருக்கும் கவர்ச்சி, காதலை நெறிப்படுத்தி, ஆடவனையும் நல்வழியில் இட்டுச் செல்லப் பெரிதும் துணை புரிகிறது. ஆகையினால்தான், அமெரிக்கச் சொல்லேருழவன். இங்கர்சால். பேரின்பம் மிக்க வீட்டுலகத்தில் ஆடவர்களோடு வாழ்வதைவிடத்துன்பம் மலிந்த இவ்வுலகத்தில் பெண்ணோடு வாழ்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன். என்று சொன்னான்" என்று பெண்மையைப் பாராட்டிப் பேசினான் அவன்.

அவன் பாராட்டு மழையில் குளித்தெழுந்த அவள் "போதும்! இன்று அதிகமாகப் பேசி விட்டீர்கள்!" என்று கூறித் தன் தேனடை இதழ்களால் அவன் பேச்சை அடைத்தாள்.

4 புன்னகை அரும்புகள்!

அவனையும் அறியாமல் அன்று
அவனுக்கோர் புத்துணர்ச்சி!
மண்ணில் நடப்பது கூட வானில்
மிதப்பதுபோல் இருந்தது.
பூத்துக் குலுங்கிய பவளமல்லிகைச்செடி
அன்று புதுமணப் பெண்ணாகக்
காட்சியளித்தது.
புதுமணத் தென்றல் அவன்
மேனியில் படர்ந்து
புல்லரிப்பை உண்டாக்கியது.
பவளப் பாலத்தின் நடுவே உருண்டோடும்
மாலைக் கதிரவனும்,
காதலனைக் காணாமல் ஏங்கிக்
கூம்பிய முகத்தோடு காட்சியளிக்கும்
காரிகைபோலச்
சேர்ந்து நிற்கும் தூங்குமூஞ்சி மரமும்,
விளம்பரத்தை விரும்பாமல்
வெட்கத்தோடு—
மரச்செறிவில் மறைந்திருந்து
கூவும் மாங்குயிலும்,
பகலும் இரவும் காதல் உணர்வோடு

பற்றியணைத்து—
ஒன்றில் ஒன்று தன்னைக்
கரைத்துக் கொள்ளும்
அந்திப் பொழுதும்,
அப்பப்பா! எல்லாம்...அன்று...
அவனுக்கு ஓவியமாய், நாடகமாய்க்
காவியமாய்க்
கனவாய்க் காட்சியளித்தன!
ஏன் இனம்புரியாத இந்த இன்பச் சிலிர்ப்
சிந்தித்துப் பார்த்தான்!
நினைவுகள் நழுவி நழுவிச் சிதறின;
சிந்தனைக்கு அழுத்தம் கொடுத்தபின்
தும்மலைப்போல் நெஞ்சத்திலிருந்து குதித்தது
அவளுடைய முகமும்,
அதில் விளையாடிய புன்னகையும்!
ஆம் இன்று வீட்டை விட்டுப் புறப்படும்போது
அவள் ஏன் அப்படிப் பார்த்தாள்?
ஒரு நூற்றாண்டு புதைத்துவைத்த
பிரெஞ்சு மதுவின் போதை அவள் கண்களில்
வழிந்தது.
அவள் கன்னமேட்டில்
மின்னி விளையாடிய புன்னகை!
புன்னகையா அது?
உள்ளுறை உவமத்தோடு கூடிய
குறுந்தொகைப் பாடல்!
வாயிற்படியை விட்டிறங்கித்
தெருவில் நடந்து சென்றபோது

அடிக்கடி திரும்பிப் பார்த்தான்.
ஏன் தெரியுமா?
அவள் பார்வை அவனைத்
துரத்திக் கொண்டு வருவதுபோன்ற உணர்வு!
விளையாட்டிலும் அவன் உள்ளம்
ஈடுபடவில்லை.
அன்று பந்தாட்டத்தில்
தோல்வி மேல் தோல்வி!
எதிரணியிலிருந்து புறப்பட்டு வந்த பந்து
அவன் தோளைத் தாக்கியது.
அப் பந்தின் தாக்குதல்
ஒரு மின்னதிர்ச்சியாய்
அவன் உடலெங்கும் பாய்ந்தது.
உடனே—
விளையாட்டை நிறுத்திவிட்டு
வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.
வீட்டுக் கதவை விரலால் தட்டினான்.
மெருகு குலையாத பிஞ்சு வெண்டை விரல்கள்
கதவை மெதுவாகத் திறந்தன.
கயலெழுதி வில்லெழுதிக்
காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகத்
திங்களொன்று எட்டிப்பார்த்தது.
அம்முகத்தில் ஒரு புன்னகை!
கண்ணில் ஒரு வினாக் குறி?
காலைக் கதிரவனின் புதிய ஒளிக் கற்றைகள்
பூமியின் முகத்தில் படும்போதும் ஏற்படும், ஒளிக்

கோலம் அவள் முகத்தில் விளையாடியது.
ஏன்? இன்று வழக்கத்திற்கு முன்னதாகவே
திரும்பிவிட்டீர்கள்?'' என்று
கேட்பது போலிருந்தது
அவள் பார்வை.
அவள் கேள்வியைப் புரிந்து கொண்டான்.
அதற்கு விடை பாட்டாகவே
அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

***தாழ்குழலே! அந்தப் பந்து—கைக்குத்
தப்பி என் தோளினைத் தாக்கி
வீழ்ந்தது; வந்ததுன் இன்ப
மேனி நினைவு......**

பந்தின் குறும்பும், பாட்டின் குறும்பும்
புரித்து கொண்ட அவள்,
குறும்புப் புன்னகை ஒன்றைக்
கன்னமேட்டில் படரவிட்டாள்.
இன்று அவள் பேசவில்லை.
அலை அலையாக
அவள் அரக்காம்பல் இதழ்க் கடையில்,
கன்னப்பரப்பில், புன்னகை மின்னல்கள்,
விளையாடிக் கொண்டிருந்தன
அவன் அவளைப் பார்த்துக் கேட்டான்;
'என்ன? இன்று
புன்னகையாலேயே பேசிக்கொண்டிருக்
கிறாய்' என்று.
மீண்டும் அவள் இதழிடுக்கில் ஒரு புன்னகைக்
கீற்று பளிச்சிட்டது.

---

* பந்துபட்டதோள்—பாரதிதாசன் கவிதை தொகுதி II

''ஓ! உன் புன்னகை! அது உன் கன்னவானத்தில் காட்சி தரும் வானவில்! பெண்களின் புன்னகைக்கு எவ்வளவு ஆற்றல்! கிரேக்கப் பேரழகி ஹெலனின் புன்னகை ஆயிரம் போர்க்கப்பல்களைத் திராய் நகர கடற்கரைக்கு இழுத்துவந்தது. கிளியோபாத்திரையின் புன்னகை உலகத்தைக் கட்டியாண்ட உரோமானியப் பேரரசின்நடுவில் விரிசலை உண்டாக்கியது. ஆங்கிலப் பேரரசி முதலாம் எலிசபெத் ஆயிரம் போர்க் களிறுகளைத் தன் புன்னகை இழையில் கட்டி வைத்திருந்தாள்.

உன் உதட்டோரப் புன்னகை
ஒவ்வொன்றுக்கும்
ஓராயிரம் பக்கம்
விருத்தியுரை எழுதலாமே!'' என்றான் அவன்.
அம்முத்தழகி—
அவன் பேச்சைக்கேட்டு மீண்டும்
முறுவலித்தாளே தவிரப் பேசவில்லை.
அவன் சொன்னான்.

புன்னகையிலேயே பேசுவது ஓரின்பம்தான்! இராமனும் சீதையும் கோதாவரி ஆற்றங்கரையில் இப்படித்தான் புன்னகையிலேயே பேசிக்கொண்டார்கள். சீதை வருவதைக் கண்டு ஓர் அன்னப்பறவை ஒதுங்கி ஓடியது.

இராமன் அன்னத்தைப்பார்த்துப் பின் சீதையின் நடையைப் பார்ர்த்துப் புன்னகை செய்தான் 'அன்னத்தின் நடை சீதையின் நடைக்குத் தோற்றுவிட்டது' என்பது அப்புன்ன கையின் பொருள்.

பின்னர் இராமன் வருகையைக் கண்டு
ஆண் யானை ஒன்று ஒதுங்கி ஒடியது.
சீதை அந்த யானையைப் பார்த்துப்

பின் இராமனின் பெருமித நடையைப் பார்த்து முறுவல் பூத்தாள். 'இராமன் நடைக்குக் களிற்றின் நடை தோற்று விட்டது' என்பது சீதையின் புன்னகைக்குப் பொருள்.

* ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்.
மாதவள் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

இப்பாட்டைக் கேட்டதும் அவள் மீண்டும் புன்னகைத்தாள். அவள் கண்கள் விரித்துவைத்த கவிதை ஏடுகளைப் போல் ஆயிரம் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அவள் கன்னப்பளிங்கு ஓவச் செய்திகளை உணர்த்திக் கொண்டிருந்தது.

அவன் சொன்னான் :

"புன்னகைகள், ஆழ நெஞ்சத்தில் அணைபோட்ட கருத்துகளையும், முகத்தில் அரங்கேற்றம் செய்யும் ஆற்றல் பெற்றவை.

"கண்ணகி ஒரு கரும்புயாழ். அவள் இன்னிசை நரம்புகள் கோவலன் விரல்களால் சுண்டி எழுப்பப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நிலா முற்றத்து நினைவுகளை அசைபோட்டு அசைபோட்டு அவள் நெஞ்சிப் பற்கள் ஓய்ந்து விட்டன. கனவு கூட அவளுக்குப் பேய்த் தேர் போலக் கலங்கலாகவே காட்சியளித்தது. பெரு மூச்சையே உயிர் மூச்சாக்கி அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

---

* ஆரணிய காண்டம்—கம்ப ராமாயணம்

“புகை ஓவியமாகக் காட்சியளித்த கண்ணகியைக் கோவலன் பெற்றோர் ஈர விழிகளால் எதிர் நின்று பார்த்தனர். அவள் பொறுமை அவர்கள் உள்ளத்தில் புல்லரிப்பை உண்டாக்கியது. அவள் பண்பு நலத்தைப் பலபடப் பாராட்டினர்.

“கணவனைப் பிரிந்திருக்கும் தனது வருத்தம் அவர்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக மலர்ச்சியை வேண்டுமென்றே முகத்தில் வரவழைத்துக்கொண்டு புன்னகைச் செய்தாள் அவள். எதை அவள் மறைக்க முயன்றாளோ, அதை வெட்ட வெளிச்சமாகக் காட்டிக் கொடுத்துவிட்டது அப்போலிப் புன்னகை அப்புன்னகைக்குப் பின்னே ஒளிந்து கொண்டிருந்த துயரக் கடலின் ஆழத்தை அளந்தறிய முடியாமல் ஆறாத்துயரில் அழுந்தினர் கோவலன் பெற்றோர்.

“யான் அகத்தொளித்த—
நோயும் துன்பமும் நொடிவது போலுமென்
வாயல் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்த—

என்று கொலைக்களக் காதையில் கோவலனிடம் கூறினாள் கண்ணகி”—என்றான் அவன்.

அதற்கும் அவள் மறுமொழி ஏதும் கூறவில்லை. மீண்டும் புதிய புன்னகை ஒன்றை வீசினாள். அந்தப் புன்னகை வீச்சின் மயக்கத்தில் அவன் நிலை குலைந்து போனான்.

அவன் மீண்டும் சொன்னான் :

“கட்டழகியின் கள்ளப் புன்னகையில் கட்டாரி ஒளிந்து கொண்டிருக்கிறது” என்று மேலை நாட்டுப் புலவன்ஒருவன் சொன்னான். அதை நீ இன்று உண்மையென்று காட்டுகிறாய்.

* பட்டாளச் சக்ரவர்த்தி
பார்த்தாலும் உன்சிரிப்புக்
கட்டாணி முத்துக்குக்
காலில்விழ மாட்டாரோ? — என்று

பாவேந்தர் சும்மாவா பாடுவார்! என் கால்களும் தள்ளாடுகின்றன. ஒருகால்...நான் இன்று உன் காலில் விழுந்தாலும் வியப்பில்லை'' — என்றான் அவன். அதற்கும் அவள் அரும்புச் சிரிப்பை அள்ளி வீசினாளே தவிர அல்லி இதழ்களைத் திறந்து பேசவில்லை.

அழகான பெண் வாய் திறந்து பேச வேண்டியதில்லை; புன்னகை அரும்புகளை மலரவிட்டுக் கொண்டிருந்தாலே போதும்.

''காரிகையின் கண்கள் செய்யும் ஆழமான புண்களை அவர்கள் கட்டழகுப் புன்னகை நொடியில் ஆற்றிவிடுகிறது.

''மெல்லியலார்க்குப் புன்னகை இயற்கை வழங்கிய ஆற்றல் மிக்க படைக்கருவி. வேலுக்குத் தப்பிவந்த வீரனும் வேல்விழியாளின் புன்னகை வீச்சுக்குத் தப்ப முடிவதில்லை.

''மங்கையரின் புன்னகை ஒரு மாணிக்க வீணை. அவர்கள் நினைத்தால் அதில் மோகனத்தையும் மீட்டுவார்கள்; அடுத்த நொடியில் முகாரியையும் மீட்டுவார்கள். அவர்களின் புன்னகை, உணர்வுகளின் கொள்கலம்; கனவுகளின் கருவூலம்.

அரும்புகள் விரியும்போது
அழகும் இதழ் விரிக்கிறது.
அரும்பு நீண்டநாள் தன்னிடத்தில்
பதுக்கிவைத்திருந்த இளமைக் கனவுகளைப்
பூப்பில் புதுமணமாய்

---

* புரட்சி கவி பாரதிதாசன் கவிதை

வெளிப் படுத்துகிறது.
அரும்பு பக்குவப்படுத்தி வைத்திருந்த
பருவ இன்பத் தேனைப்
பாட்டு வண்டுக் காதலனுக்குப்
படைத்து மகிழ்கிறது,
காதல் அதன் கதவைத் தட்டும்போது!
இனத்தைப் பெருக்கும் மகரந்தமும்
அரும்பின் —
இதழ்ச் சிறைக்குள் தானே
இளவேனிலை எதிர்பார்த்துத்
தூங்கிக் கொண்டிருக்கிறது !
இத்தனை சிறப்புகளையும்
தன் இதழுக்குள் மறைத்துக்
கொண்டிருக்கிறது அரும்பு.
அதுபோல் எத்தனையோ குறிப்புகளை
ஏந்திழையார் புன்னகை
தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கிறது.
அதனால்தான் வள்ளுவர்,
புன்னகையை அரும்பென்றார்

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
'நகை மொக்குள்' உள்ளதொன்று உண்டு. 1274

"'நகை மொக்குள்'' — எவ்வளவு கற்பனை நயத்தோடு கூடிய சொல்லாட்சி!'' — என்று சுவை மயக்கத்தோடு கூறி முடித்தான் அவன்,

அவள் அவன் கூறிய பாட்டைச் சுவைத்தாள்!

அவனுடைய பசுமையான அறிவாற்றலைச் சுவைத்தாள்!

அவன் காதற்கரும்பு மேனியைக்
கட்டெறும்புக் கண்களை மேயவிட்டுச் சுவைத்தாள்.
இப்போது அவள் கண்கள் பேசின!
கன்னங்கள் பேசின !
உதடுகள் ஓராயிரம் உணர்வுகளை
நடுக்கத்தால், நாகரிகமாக வெளிப்படுத்தின !
காதலைக் கண்களால் இரக்கும்
இராப் பிச்சைக்காரி ஆனாள் அவள்.
நாட்டிய வெண்புறா போன்ற அவள்
நளின மலரடிகள்
படுக்கை அறைநோக்கிப் படர்ந்தன.
இன்று அவள் பெண்மை,
பெண்களே விரும்பும் பேரழகு பெற்றது.
அவள் கண் தூதுக்குக் கட்டுப்பட்ட காதல்
வெள்ளாடாய்ப் பின் தொடர்ந்தான் அவன்.
அப்போது அவன் வாய்
இந்தத் திருக்குறள் தேனடையைப்
பிழிந்து கொண்டே சென்றது.

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு — 1280

5. நண்டு மிதித்த அத்திப்பழம்

சித்திரைத் திங்களின் பிற்பகுதி!
கத்திரிவெயில் நெருப்புப் பறப்பதுபோல்
காய்கின்ற இரக்கமற்ற பகற்பொழுது ஓய்ந்து
இரவுப் போர்வை இந்நிலத்தைப் போர்த்தது
நுரை மணக்கும் சந்தனக் கட்டியைத்
தோய்த்துக்
குளித்துத் துவட்டிய பெண்ணின்
பொன்மேனிபோல்
அப்பழுக் கற்ற நீலவானம்.
பருவம் அழகின் வாசலைத்
தட்டிக்கொண்டிருக்கும்
குருத்துக் குமரியின் குங்கும முகம் போல
மலைக்குப் பின்னாலிருந்து
தாணத்தோடு நிலவுப்பெண்ணின் சிவந்தமுகம்
எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.
அழகுக் குவியலை அள்ளிப்போட்டது போல்
ஒப்பனையில் விருப்பமின்றிக்
கூந்தல் மேகம் கலைந்து
நிலாமுற்றத்தில் படுத்திருந்தாள் அவள்.
களைந்து எறிந்த 'நாயுடுஹால்'
பதவி பறிபோன அமைச்சரைப்போல்

பக்கத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்தது.
வெப்பக் கொடுமைக்கு ஆற்றாமல்
பவளத் திட்டுகள் போல் அவள் மார்பில்
படர்ந்த தடிப்புகள்! அதில் கொப்புளங்கள்!
முன்தானை விசிறியால் விசிறிக்கொண்டு
மொட்டை மாடியில் படுத்தவண்ணம்
வானத்தைக் கண் கொட்டாது
பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.
காதலர் அருகில் இருக்கும்போது குளிர்ச்சி
யைக்கொட்டும்
இந்தப் பாழும் நிலவு
ஏன்தான் இப்போது கொதிக்கிறதோ?
என்று சலித்துக் கொண்டாள்.
"இப்பாழும் நிலவு—
என்னை மட்டுமா சுடுகிறது?
இந்த வானத்தையும் அல்லவா சுடுகிறது!
இது அள்ளித் தெளிக்கும் நெருப்பால்
என் மார்பில் மட்டுமா கொப்புளங்கள்!
இந்த வானப் பெண்ணின் மார்பிலும் அன்றோ
விண்மீன் கொப்புளங்கள்!
இந்தச் சுடு நிலா
என்னை மட்டுமா படுத்துக்கிறது?
அந்தத் தமயந்தியை
என்னபாடு படுத்தியது?
இதன் கொடுமைக்கு ஆற்றாத தமயந்தி
செப்பிளங் கொங்கைமீர்! திங்கள் சுடர்பட்டுக்
கொப்புளம் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்
மீன்பொதிந்த வானம் எனச்சொல்வ தென்கொலோ

தேன்பொதிந்த வாயால் தெரிந்து—என்று
வசைபாடித் தூற்றினாளே! அது பொருத்
தந்தான்!"

என்று கூறினாள் அவள்.

"என் கணவர் என்னை ஒரேயடியாகப் 'பிரிந்தா சென்று விட்டார்? இல்லை! கோடை வகுப்பு (Summer course)க்குக் கோவை சென்று ஒரு திங்கள் ஆகிறது. அதற்குள் ஊருக்குள் ஓர் அலர், கிசு கிசு! என் கணவர் என்னைக் கைவிட்டு விட்டு எங்கேயோ ஓடிப்போனது போல்!

அடுத்த வீட்டு அலர்மேலுவும், கோடிவீட்டுக்
கோமளமும் காலையில் பார்த்த
சூட்டுக்கோல் பார்வை
என்னை நிலைகுலையச் செய்துவிட்டது.
மரத்தடியில் தனியாகக் கிடந்த
ஓர் அத்திப் பழத்தை
ஏழு நண்டுகள் ஏறி மிதித்ததாக
ஒரு கற்பனை!
அந்த அத்திப் பழம்போல்
அவர்கள் பார்வை பட்டு
நானும் நைந்து போனேன்"
என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் அவள்.
மாடிப் படியில் யாரோ ஏறிவரும்
ஓசை கேட்டுத் திரும்பினாள் அவள்!
அவன்தான்! ஆம்! அவனே தான்!
தண்டவாளத்தில் பாய்ந்துவரும்
கோவை விரைவு வண்டியைப் போல்

அவளை நோக்கிப் பாய்ந்து வந்தான் அவன்.
'நில்லுங்கள்!' என்றாள் அவள்.
அவன் நின்றான்!
கண்களால் அவளை அளந்தான்!
அவள் மூன்று விரலைக் காட்டினாள்.
'உண்ணா நோன்பா?' என்று
சலிப்போடு கேட்டான் அவன்.
அவள் குறும்புப் புன்னகையோடு
தலையசைத் தாள்;
ஓடுகின்ற புகைவண்டியிலிருந்து
கழற்றிவிடப்பட்ட தனிப் பெட்டிபோல்
வேகம் குறைந்து போனான் அவன்.
அவள் சொன்னாள் :
''உங்கள் நிலைக்காக
நான் மிக வருந்துகிறேன்,
○ கடந்த ஒரு திங்களாக
என் அழகுப் பால்
கன்றும் உண்ணாமல்
கலத்திலும் விழாமல்
நிலத்திலே சிந்தி வீணாயிற்று!
என் நினைவே உங்களுக்கு
அற்றுப் போய்விட்டது!''
என்று கூறித் தேம்பினாள் அவள்.
அவளது குறுந் தொகைக் கற்பனையைக்
கேட்டதும்,
அவன் இலக்கிய உள்ளம்
விழித்துக் கொண்டது.
அவன் சொன்னான் :

○ கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே! —குறுந்தொகை 27

'' ஆருயிரே !
சென்ற கிழமை கோவையில்
எங்கள் இலக்கியப் பேராசிரியர்
பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது
ஆங்கிலக் கவிஞன் ஜான்டன் (John Donne)
என்பானுடைய ஒரு காதற் கற்பனையை
விளக்கினார். நான் அசந்து போய்விட்டேன்.
* அக்கவிஞன் தன் காதலியைப் பிரிந்து
அயல் நாடு செல்லவேண்டிய
நிலை ஏற்பட்டுவிட்டது.
அங்கிருந்து தன் காதலிக்குக்
கவிதையிலே ஒரு கடிதம் எழுதுகிறான்.
அதில் தன்னையும் தன் காதலியையும்
கவராய (Compass) த்தின்
இரண்டு முட்களுக்கு ஒப்பிடுகிறான்.
வட்டமிடும் போது
நடுவிலே ஊன்றி நிலையாக
நிற்கும் முள்ளுக்குக் காதலியையும்
சுற்றிவரும் முள்ளுக்குத் தன்னையும்
ஒப்பிடுகிறான்.
சுற்றிவரும் முள் எப்படிச் சுற்றினாலும்
நடு முள்ளைத்தானே
சுற்றிச் சுற்றி வருகிறது.
சுற்றிவரும் முள் தொலைவில் சென்றால்,
நடுமுள் அதை நோக்கிக் குனிகிறது;
நெருங்கிவந்து தன்னை அடையு போது
மகிழ்ச்சியோடு நிமிர்ந்து நிற்கிறது.

---

* And though it in centre sit
Yet when the other far doth roam
It leans, and hearkens after it,
And grows erect, as that comes home.
A Valediction — John Donne

அதைப் போலத்தான் நானும் !
நான் எங்கிருந்தாலும்:
என் நினைவுகள்
உன்னைச் சுற்றியே வட்டமிடுகின்றன;
உன் நினைவுகளையே நானும்
தொலைவிலிருந்து பகிர்ந்து கொள்கிறேன்
எங்குச் சுற்றினாலும்
என் இறுதிக் குறிக்கோள் நீ தானே ! "
என்றான் அவன்.

" இந்த வக்கணைப் பேச்சுக்குக்
குறைவில்லை" என்று கூறினாள் அவள்.
"என்ன செய்வது?
எடுத்துக் கொண்டபணி
முற்றுப் பெற வேண்டாமா?
இன்னும் ஒன்றரைத் திங்கள்
நான் கோவையில் உன்னைப் பிரிந்து...
என்று அவன் கூறி முடிக்குமுன்,
"நிறுத்துங்கள்?" என்று கூச்சலிட்டாள் அவள்.
அருகிலே கிடந்த திருக்குறளை எடுத்துப்
பரபரப்பாகப் புரட்டினாள்
' இந்தக் குறளைப் படியுங்கள் !'
என்று அவனிடம் நீட்டிவிட்டு
அம்புபோல் அங்கிருந்து பறந்து சென்றாள்.
குறளைப் படித்தான்;
செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை .1151

6. கள்ளும் காமமும்

21—3—81 மாலை ஆறு மணி. அவன் அயலூர் சென்றிருந்ததால் அவளுக்கு வீட்டில் இருப்புக் கொள்ள வில்லை; வீட்டைப் பூட்டி விட்டு அடுத்த வீட்டு அலர்மேல் மங்கையைப் பார்க்கச் சென்றாள். அவள் பள்ளித் தோழி; கல்லூரிக் காலத்தில் காதற் கனவுகளைப் பரிமாறிக் கொள்ளும் கட்டில் தோழி!

கையில் சிறிய வானொலிப் பெட்டியுடன் வீட்டு முற்றத் தில் அமர்ந்திருந்தாள் அலர்மேலு. தமிழகச் சட்டமன்றத் தில் நாவலர் நெடுஞ்செழியன் அன்று வெளியிட்ட நடப்பு ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பற்றி மாநிலச் செய்தி முழங்கிக் கொண்டிருந்தது.

'மரமேறிகள் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் கள்ளிறக்கி விற்பனை செய்யப்படும்'' என்ற செய்தி அலர்மேலுவின் நினைவில் நின்றது. ஏனென்றால் அவர்கள் தோப்பில் ஐந்தாறு தென்னை மரங்கள், கருவுற்ற பெண்களைப் போல் காய்க் குலைகளைத் தாங்கி நின்று கொண்டிருந்தன.

'அரசு அலுவலர்களுக்குத் தமிழக அரசு ஒரு பஞ்சப் படி உயர்வு அளித்திருக்கிறது' என்ற செய்தி அவளுக்கு இனித்தது. ஏனென்றால் அவள் கணவன் அரசாங்க அலுவலர்.

'மதுவிலக்கைத் தமிழக அரசு தளர்த்தியிருப்பதுபற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டாள் அலர்மேலு.

'மதுவிலக்கைத் தளர்த்துவதும் இறுக்குவதும் எனக்கு ஒன்றுதான்; போதையில்லாமல் ஒரு நாள் கூட நான் இருந்ததில்லை' என்றால் அவள்.

அலர்மேலு அவளை வியப்போடு நிமிர்ந்து பார்த்து என்னடி உளறுகிறாய்?' என்று கேட்டாள்.

'உளறவில்லை; உண்மையைத்தான் சொல்லுகிறேன். கள் உண்டால்தான் போதைத்தரும்; ஆனால் கண்டாலே போதை தரும் பொருளைக் கைப்புறத்திலேயே நான் வைத்திருக்கின்றேன்' என்று குறுஞ்சிரிப்புடன் சொன்னாள் அவள்.

'அது என்ன பொருள்?' என்று ஆவலோடு கேட்டாள்' அன்புத் தோழி.

''அதுவா? கட்டி அணைக்கும் காதற் பொருள்'' என்று கொட்டிச் சிரித்தாள் அவள்.

''சுரைக் கொடி கூரையெல்லாம் படர்ந்தாலும் வேர் நிலத்தில் தான் இருக்கும். அதுபோல நீ எதைப்பற்றி பேசினாலும் உன் பேச்சின் வேர் எப்போதும் காதல்தான்!'' என்றாள் அலர்மேலு.

''கள்ளுக்கும் காதலுக்கும் ஒரு பொதுப் பண்புண்டு. கள், கொஞ்சம் குடித்ததும் மேலும் மேலும் குடிக்கத் தூண்டும்; காதலும் அப்படித்தான். சுவைத்தவர் காதலை மறப்பதுண்டோ? இல்லாவிட்டால் பாவேந்தர் பாரதிதாசன்,

அன்றன்று புதுமையடி! சலிப்பதுண்டோ
ஆரணங்கே! நீ கொடுக்கும் இன்பம்?

என்று மெய்ம்மறந்து பாடியிருப்பாரா?'' என்றாள் அவள்.

''ஆமாம், கள்ளைப்பற்றி இவ்வளவு தெளிவாகப் பேசுகிறாயே! அதனை அருந்தியிருக்கிறாயா நீ எனக்கென்

னமோ உன் மேல் ஐயமாகத்தான் இருக்கிறது'' என்றாள் அலர்மேலு.

''போடி பித்தி! சில மடாதிபதிகள் இல்லறத்தைப்பற்றி எழுதுகிறார்கள் என்றால், மெல்லியலார் மேனியில் படாமல் இல்லறம் எப்படி இவர்களுக்குப் புரிந்தது என்று கேட்பாய்ப் போலிருக்கிறதே!

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று—1090

என்று வள்ளுவர் பாடியிருக்கிறாரே! இதைப் படித்தால் போதாதா கள்ளையும் காமத்தையும் பற்றிப் பேச? கள்ளைக் குடித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா?'' என்று கேட்டாள் அவள்.

''இந்தக் குறளை நீ சொன்னவுடன், கள் காதலுக்கு மட்டுமன்று; அரசாங்கம் அடிக்கடி உயர்த்தும் பஞ்சப்படிக்கும்(D. A.) நல்ல உவமையாகப் படுகிறது'' என்றாள் அலர்மேலு.

''எப்படி?'' என்றாள் அவள்.

''கள்ளைக் கொஞ்சம் குடித்தால், மேலும் இன்னும் கொஞ்சம் கிடைக்காத என்ற ஏக்கம் குடித்தவர் உள்ளத்தில் ஏற்படுவது இயல்பு. இந்தப் பஞ்சப்படியும் அப்படித்தான். ஒரு தவணை, இப்பஞ்சப்படியைக் கொடுத்தால், அடுத்த தவணையும் விரைவில் கொடுக்கமாட்டார்களா என்ற ஏக்கம் அரசு ஊழியர்களுக்கு ஏற்படுகின்றதல்லவா?'' என்றாள் அலர்மேலு.

''என்னடி! என் கணவரைப் பகடி செய்கிறாயா?'' என்று கேட்டாள் அவள், அப்போது வீட்டுக்குள்ளிருந்து அலர்மேலுவின் தாயார் ஆவிபறக்க இரண்டு கோப்பையில் தேநீர் கொண்டு வந்தாள். அலர்மேலு ஒரு கோப்பையைத்

தான் எடுத்துக்கொண்டு மற்றொரு கோப்பையை அவள் பக்கம் நீட்டினாள். ஆனால் அவள் மறுத்தாள்.

' என்னடி தேநீர் அருந்துவதில்லையா? என்றாள் அலர்மேலு.

''இப்போது சூடாக நான் எதையும் சாப்பிடுவதில்லை'' என்றாள் அவள்.

''ஏன்?'' என்று கேட்டாள் தோழி.

கடந்த நான்கு நாட்களாக என் கணவர் என் நெஞ்சத்தில் நீங்காமல் குடியிருக்கிறார். சூடாக எதையாவது சாப்பிட்டால் அவரை அது சுட்டுவிடாதா?'' என்றாள் அவள், அதைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள் அலர்மேலு. கயிறு அறுந்து சிதறிய சதங்கை மணிகளாய் உருண்டது அவள் சிரிப்பு.

''உன் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது!'' என்றாள் அலமேலு.

''இது என் வேடிக்கையல்ல. வள்ளுவனின் காமத்துப் பால் வேடிக்கை.

நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து —1128

என்ற பாட்டை நீ படித்ததில்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''என்ன இன்று காதற்சுவை உன் பேச்சில் சற்றுத் தூக்கலாகவே இருக்கிறது?'' என்று கேட்டாள் தோழி.

''என்ன செய்யட்டும், நான்கு நாள் பட்டினி......உம்'' என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

''ஏன், உன் அம்பிகாபதி......?''

''ஆமாம்! ஊரில் இல்லை. அலர்மேலு! ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடிப்படையிலேயே ஒரு வேறுபாடு. ஓர் ஆடவன் வீட்டை விட்டு வெளியில் சென்றதும் தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பான்; வீட்டை மறந்து விடுவான். பெண் அப்படியில்லை; அவள் தன்னை மறந்து விட்டு, வெளியில் சென்ற ஆடவனையே நினைத்துக்கொண் டிருப்பாள். இந்த ஆடவர்களே போனால் போன இடம்? வந்தால் வந்த இடம்! 'இரண்டு நாளில் வருகிறேன்' என்று சொல்லி விட்டுச் சென்ற என் கணவர் நான்கு நாட்கள் ஆகியும் வரவில்லையென்றால் பாரேன்: வரட்டும்! இந்த முறை எளிதில் மசியப் போவதில்லை. முகங்கொடுத்துப் பேசுகிறேனா பார்!'' என்று ஆத்திரத்தோடு பேசிக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போது தடதட வென்ற ஓசையோடு புகையைக் கிளப்பிக்கொண்டு அவள் வீட்டின் முன்னால் வண்டி யொன்று வந்து நின்றது. வண்டியிலிருந்து அவன் இறங்கிக் கொண்டிருந்தான். தான் தோழியிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் புள்ளிமானாய் ஓடினாள் அவள். அவன் பெட்டியை எடுத்துக் கொண்டு முன்னால் சென்றான். தன்னைத் தானே தாங்க முடியாத அப்பழக்குலை, வண்டியில் இருந்த பழக்கூடையைச் சுமந்து கொண்டு தள்ளாடியவண்ணம் அவன் பின்னால் சென்றது.

வீட்டுக்குள் நுழைந்ததும் அவள் சத்தமிட்டாள்!

''அட விடுங்கன்னா....சட்டை பூரா ஒரே புழுதி...தலை யெல்லாங் கரித்தூள்...அப்பப்பா...இருங்க சீக்கிரம் வெந்நீர் வைச்சுதர்ர...''என்று கூறிய வண்ணம் நழுவி மீனாக ஓடி னாள் அவள்.

மெருகு குலையாமல் செடியினின்றும்
புதிதாய்ப் பறித்தெடுத்த

நாட்டு வெண்டைப் பிஞ்சைப்
பல்சக்கரம் போல் வட்ட வட்டமாக
வெட்டிப்போட்டுச்
சுவையாக சுவைக்கும் மோர்க்குழம்பு
அவனுக்குப் பிடிக்கும்!
காம்பு பெருத்துப்
புல்லிதழ் முழுமையாகப் பிரியாமல்
பூம்பிஞ்சாக எட்டிப் பார்க்கும் கத்தரியை
எண்ணெயில் போட்டுத் துவட்டி
எடுத்து வைத்த பொரியல்
அவனுக்குப் பிடிக்கும்.
கொத்தாக ஒடித்துப் போட்ட
கறிவேப்பிலை மிதக்கக்
காரமாக வைக்கும் மிளகுச் சாறு
அவனுக்குப் பிடிக்கும்.
இவை எல்லாவற்றையும் விட,
அவள் மேனியான எட்டுச் சாண் தங்கத்தை
எடை போட்டுப் பார்த்து—
அவன் அமுதூறும் இதழ்களை
அசை போட்டு —
தெவிட்டாத இன்பத் தேன்மலரில் படிந்து
இரவை விரட்டுகின்ற இன்பவிளையாட்டு
அவனுக்கு மெத்தப் பிடிக்கும்!
அன்று மணித்துளிகளை அவர்கள்
இன்பத் துளியாக மாற்றிக்
கொண்டிருந்தனர்.
கோழி கூவும் ஓசை கேட்டது!

அவள் கொதித் தெழுந்தாள்.

"இந்தப் பாழும் கோழிக்குச் சளிப்பிடித்துத்
தொண்டைகட்டக் கூடாதா! அல்லது
விக்கலெடுத்துத்
தொண்டை அடைக்கக் கூடாதா?"
என்று பொருதுனாள் அவள்.

"ஏன்?" என்றான் அவன்.

"அதற்குள் இரவைப் பகலாக ஆக்குதற்கு
எச்சரிக்கைக் குரல் கொடுக்கிறதே!
என் இன்பத்தை பாதியிலே நெரிக்கும்
இதன் குரல்வளையை நெரித்தால் என்ன?"
என்று சீற்றத்தோடு கேட்டாள் அவள்

அவன் சிரித்தான்.

"உன் விருப்பத்துக்கு இயற்கையும் பணிந்து கொடுக்குமா? உனக்காகவே பாவேந்தர் ஒரு கோழிப் பாட்டுப் பாடிவைத்திருக்கிறார்"

"என்ன பாட்டு?" என்று ஆவலோடு கேட்டாள் அவள்

"உன்னைப்போல் ஓர் உணர்ச்சிமிக்க காதலி! இரவு முழுவதும் காதலனோடு இன்பம் துய்த்த அவள், விடியலுக்குக் கட்டியம் கூறும் கோழியின் கூவலைக் கேட்டுச் சீற்றம் கொள்கிறாள். பொழுது விடியாமலே இருக்கக் கூடாதா என்பது அவள் ஏக்கம்.

எனவே கூவித்தொலைத்த கோழியின் மீது
அவளுக்குச் சினம் பொங்குகிறது!
கூவிக் கூவிக் கூடியிருக்கும் காதலர்களுக்கு
நாள் தோறும் தொல்லை தரும் கோழிகளை
வளர்ப்பவர்கள் மீதும் அவள் சீற்றம் பாய்கிறது.
இறுதியாக

கோழி வளர்ப்பதைத் தடை செய்வதற்குச்
சட்டம் கொண்டுவராத
சட்டமன்றத்தையும் சாடுகிறாள் அவள்"

—என்றான் அவன்.

"அப்படியா? அப்பெண்ணின் நல்லாளுக்கு என் வாழ்த்துக்கள்! எங்கே! அந்தப் பாட்டு தேனடையை என் காதில் சற்றுப் பிழியுங்களேன்;" என்று ஆவலோடு கேட்டாள் அந்தக் கொடிமுல்லை.

அவன் பாடினான்.
சட்டமன்றம் கோழி
வளர்ப்பதைத் தடைசெய்யுமா?
தொட்டார்கை தொட்டுச்
சுவைக்குமுன்—பட்டப்
பகலாயிற் றென்று
பறையடிக்கும் சற்றும்
அகலார் அகலும் படிக்கு.

"ஆகா பெண்ணின் உணர்வுகளைப் பாவேந்தர் எவ்வளவு நுட்பமாகப் பாடியிருக்கிறார்! அத்தான், எனக்கோர் ஐயம்! இக்காதல் ஆற்றாமை யுணர்வைப் புலப்படுத்துவதில் நம் நாட்டுப் பெண்கள் மிகவும் நுட்பமானவர்கள். மற்ற நாட்டுப் பெண்கள் எப்படி?" என்று கேட்டாள் அந்த நளின மலர்.

"காதல் உணர்வைப்புலப்படுத்துவதில் எல்லா நாட்டுப் பெண்களும் ஒரே மாதிரிதான். காதல் வானில் களங்கமற்ற நிலவாகக் காட்சி தரும் ஜூலியத் ஓர் இத்தாலியக் கொத்துமலர். பத்தும் நான்கும் கூடிய பருவப்படிகளைத் தாண்டிய உருவப் பளிங்குச் சிலை. காதலன் ரோமியோவோடு காரிரவுக் கரும்பைச் சுவைத்து மென்று கொண்டி

ருக்கிறாள். குயில் (bark) தன் தீங்குரலால் விடியலுக்கு வர வேற்பு வழங்குகிறது.

"அதைக்கேட்ட ரோமியோ விடியும் நேரமாகி விட்டதை உணர்ந்து திடுக்கிட்டு எழுகிறான். காதலியின் பெற்றோர் விழித்து எழுந்து விட்டால் என்ன செய்வது என்ற அச்சம்; புறப்படத் தயாராகிறான். அவன் பிரியப் போகிறான் என்ற நினைவே அவளைப் பேதுறச் செய்கிறது.

அவள் காதலனைப் பார்த்துக்
கண்ணீரோடு பேசுகிறாள்;
அன்பே! நீங்கள் பிரியத்தான் வேண்டுமா!
விடியல் என்னும் கூரியவாள்
இரவுத் திரையைக் கிழிக்க
இன்னும் வெகுநேரம் இருக்கிறது!
அத்தோட்டத்து மாதுள மரத்தில்
அமர்ந்த வண்ணம்—
உங்கள் அழகிய செவிகளில்
அச்சந்தரும் இசையைப் பாய்ச்சுவது
விடியற் காலக் குயிலன்று;
இரவில் காதலர் நெஞ்சில்
இன்பவெறியூட்டிப் பாடித்திரியும்
வானம்பாடி
என்னை நம்புங்கள் இன்னுயிரே!—

என்று கூறிகிறாள். அப்பாட்டைக்கேள்:

Wilt' thou be gone? It is not yet near day; It was the nightingale, and not the lark, That pierc'd the fearful

hollow of thine ear; Nightly she sings on yon pomegranate tree;

Believe me, love, it was the nightingele

—[Shakespears's Romeo and Juliet.]

அடுத்தநாள் காலை மணி பத்திருக்கும். அவன் வெள்ளை உடையுடுத்தி வீதியுலாச் செல்லுகிறான் அலுவலகம் நோக்கி. நிமிர்ந்த அவன் நடையழகைத் தன் கண்களால் தின்னத் தொடங்கினாள் அவள்.

தெருக்கோடி அவன் திருவுருவை மறைத்ததும் திகைத்தவளாய்த் திரும்பினாள். கைப்பிடிச் சுவருக்கு அப்பாலிருந்து அலர்மேலு தன் அல்லி விழிகளால், அவளை அளந்து கொண்டிருந்தாள்.

கண்களில் குறும்பு!

புன்னகையில் கேலி!

"இந்த ஆடவர்களே இப்படித்தான்...போனால் போன இடம்...வந்தால் வந்த இடம். வரட்டும்! இந்த முறை எளிதில் மசியப் போவதில்லை...முகங்கொடுத்துப் பேசப்போவதில்லை, இந்த வெண்ணெய் வேதாந்தமெல்லாம் கணவன் சூடு பட்டதும் உருகி, ஓடிவிட்டதோ? ஏண்டி! என்ன...இரவெல்லாம் விளக்கு..." என்று ஊசிச் சொற்களால் குத்தினாள் அலர்மேலு.

முகத்தில் படர்ந்த நாண மின்னல்களைக் கையால் ஒதுக்கிக் கொண்டு, "போடி! உன் குறும்பு! ஒழிக! நான் என்னடி செய்யட்டும்? என் வெட்கங்கெட்ட பொல்லாத கால்கள் அவரைத் தொலைவில் கண்டதும் என்னைத்

தூக்கிக்கொண்டு ஓடிப்போய் அவர் முன்னால் நிறுத்து கின்றனவே!

"நாம் கண்ணுக்கு மைதீட்டுவதற்காகத் தீட்டுக் கோலில் மையை எடுக்கும்போது, அது நம் கண்களுக்குப் புலப்படுகிறது. ஆனால் அருகில் கொண்டுவந்து தீட்டும் போது அதே மை, கண்களுக்குப் புலப்படுவதில்லை. கணவன் நம்மைப் பிரிந்து தொலைவில் இருக்கும்போது அவன் குற்றங்கள் நம் கருத்துக்குப் புலப்படுகின்றன; ஆனால் நம் அருகில் வந்ததும் அவன் குற்றங்கள் மறைந்து விடுகின்றன" என்று கூறிப்புன்னகை செய்தாள் அவள்.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து *1985*

7. கண்களும் கனவுகளும்

எட்டு நாள் உலகத் தமிழ்மா நாட்டை மதுரையில் இருந்து சுவைத்து விட்டுத் திரும்பியிருந்தான் அவன். பயணக் களைப்பு அவனைப் படுக்கையில் தள்ளிவிட்டது. மாலையில் குளித்துவிட்டுக் கைலியும் மேல் துண்டுமாகச் சாய்வு நாற்காலியில் படுத்தான் அவன்.

குளியலறைக் கதவு திறக்கும் 'சடக்'கொலி அவன் காதில் விழுந்தது. அவனையறியாமல் அவன் பார்வை அப்பக்கம் திரும்பியது. ஈரத்தைப் பிழிந்துவிட்ட தலை யோடு, அரை குறையாக அள்ளிச்சுருட்டிப் போட்டுக் கொண்ட ஆடையோடு, அவனைக் கடந்து கூடத்து அறை நோக்கிக் குலுங்கி நடந்து கொண்டிருந்தாள் அவள். பாதி முகில் மறைத்த நிலவு (A Full Moon Half Dipped in Cloud) என்று அழகி, 'காடிவா'வைப் பற்றி டென்னிசன் (Tennyson) பாடிய வரி அவன் உள்ளத்தில் இசை எழுப்பிக் கொண்டிருந்தது.

குளியலறையிலிருந்து பனி மலர்போல் குளித்து வரும் பெண்ணழகின் தாக்கம் எந்த ஆடவனாலும் எதிர்க்க முடியாதது, என்று எங்கோ படித்த நினைவு அவனுக்கு. 'ஆம்' என்றது அவன் உள்ளம்.

ஐந்தடி உயரமுள்ள தனது அங்கத் தங்கத்தைச் சிவந்த அம்பர்ப் பட்டுக்குள் பதுக்கிக் கொண்டு, அவனருகில் வந்தாள் அவள். அருகில் கிடந்த பிரம்பு நாற்காலியில் உட்

சார்ந்து அவன் கால்களை மடிமேல் தூக்கி வைத்துக் கொண்டு, வீணையின் தண்டை மெதுவாக வருடுவதுபோல் வருடினாள். அவள் இசை கூட்டிய அந்த இன்பலயிப்பில் மெய் மறந்திருந்த அவன், விழிகளை உயர்த்தினான்.

அவள் முகத்தைப் பார்த்தான்!
குளிர்ச்சி யூட்டிய சரச்சந்தனப்
பலகை போன்ற
அவள் கன்னங்களைப் பார்த்தான்!
நெற்றியைப் பார்த்தான்;
நெற்றி விளக்குப் போல்
அதன் நடுவில் இருந்த பொட்டைப்
பார்த்தான்!
சிவந்த இதழ்ப் பளிங்குக் கடைக்காலின் மீது
எழும்பி நின்ற அவள் சிற்பக் கோபுர
மூக்கைப் பார்த்தான்.
கடைசியில் அவன் பார்வை
அவள் கண்களில் வந்து நிலைகுத்தி நின்றது;
கூர்ந்து பார்த்தான்.
'என்ன பார்க்கிறீர்கள்' என்று பவள
வாயைப் பாதி திறந்து கேட்டாள் அவள்.

"ஆங்கிலப் பெரும் புலவன் சேக்ஸ்பியர் சொன்னான் :

'பெண்களின் கண்கள் செழிப்பான வளவயல்கள்; சிந்தனையூறும் காப்பியங்கள்; படிக்கத் தூண்டும் பல்கலைக் கழகங்கள்; சுட்டும் நெருப்புச் சுடர்கள்' என்று ஒரு பெண்ணின் கண்கள் புலப்படுத்தும் அழகுணர்ச்சியை எந்தப் பாவலனாலும் புலப்படுத்த முடியாது. பெண்களின் கண்களுக்கு அல்லியையும், தாமரையையும், குவளை மலரையும்

சில புலவர்கள் ஒப்பிட்டுப் பாடுகிறார்கள். அவர்களை நான் மடையர்கள் என்று சொல்லுவேன். என்னைப் பாடச் சொன்னால் அந்த மலர்கள் எல்லாம் பெண்களின் கண் முன்னால் 'சருகுகள்' என்றுதான் பாடுவேன்'' என்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசினான் அவன்.

''அப்படி யென்றால் தூக்கக் கலக்கத்தில் எழுந்த ஒரு பெண்ணின் சாறுபடிந்த விழிகளை—

பாதி திறந்த கோதையின் விழியோ
பலகறை நடுவில் பதிந்த கோடு

என்று இருண்ட வீட்டில் பாடிய பாவேந்தரை நீங்கள் தூக்கு மேடைக்கு அனுப்பிவிடுவீர்கள் போலிருக்கிறதே' என்று கூறிப் புன்னகை செய்தாள் அப்பூங்கொடி.

''நான் பேசுவது பெண்ணின் விழியைப்பற்றி; இருண்ட வீட்டில் வருபவள் பெண்ணா?'' என்று கேட்டான் அவன்.

''நீங்கள் கண்ணை எப்படி வேண்டுமானாலும் பாராட்டிக் கொள்ளுங்கள். என்னைப் பொருத்த வரையில் முகத்திலிருக்கும் என் கண்கள், எனக்குக் கொடிய பகைவர்கள். இந்த எட்டு நாட்களாக அவை என்னைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் அவள்.

'ஏன்?' என்று வியப்போடு கேட்டான் அவன்

'நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவை இரவும் பகலும் அழுது கொண்டே இருந்தன' என்றாள் அவள்.

'ஏன் அழவேண்டும்?' என்றான் அவன்.

''குறும்புதான். நீங்கள் வீட்டில் இருக்கும்போது உங்கள் அழகை அணுஅணுவாகச் சுவைத்து மகிழ்ந்த

இப்பொழுதும் கண்கள், நீங்கள் இல்லாத நேரத்தில் உங்களைக் காண ஏங்கி ஏங்கி அழுகின்றன. உங்களைப் பார்ப்பானேன்? பின்னர் அழுவானேன்? இக்கண்களின் செயலை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது." என்றாள் அவள்.

"உனக்கு மட்டுமல்ல! வள்ளுவருக்குந்தான்! இல்லையென்றால்

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்

இதுநகத் தக்கது உடைத்து—1173

என்று பாடுவாரா?" என்று விளக்கினான் அவன்.

"இவை அழுது தொலைத்தால் கூட எனக்குக் கவலை இல்லை. என்னைத் தொல்லைப் படுத்தாமல் இருக்கக் கூடாதா?" என்றாள் அவள்.

"உனக்கென்ன தொல்லை?" என்று கேட்டான் அவன்

"இவை அழுது அழுது என்னைத் தூங்க விடாமல். அடிக்கின்றன!" என்றாள் அவள்.

"கண்ணின் பண்பே அதுதான். 'இக்கண் துன்பக் காலத்தில் மட்டுமல்ல; இன்பத்திலும் அப்படித்தான். காதலன் பிரிந்திருந்தாலும் இவை தூங்குவதில்லை; காதலன் அருகிலிருந்தாலும் தூங்குவதில்லை. அதனால் தான் வள்ளுவர்

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண் —1173

என்று பாடுகிறார்" என்றான் அவன்

"ஆமாம்! கண்கள் காரிகையரின் உயிரை வாங்கும் கொடியவர்கள்' என்றாள் அவள்.

அக்கண்கள் உங்களை மட்டுமா உயிரை வாங்கு கின்றன? எங்களையும்தான். அதனால்தான் 'கண்டார் உயிருண்ணும் கண்' என்றார் வள்ளுவப் பெருமான். இன்னும் சொல்லப் போனால் இந்தக்கண்களின் பசி புதுமை யானது. இவை ஆடவர்களின் உடலை உண்பதோடு அமைவதில்லை: ஆடவர்களின் கண்களையும் விரும்பி உண் கின்றன'' என்று கூறி நிறுத்தினான் அவன்.

''அப்படியா?'' என்று ஆவலோடு கேட்டாள் அவள்.

சீதையின் கண்கள் இராமனின் கண்களைக் கவ்வி உண் டதை நீ படித்ததில்லையா?'' என்று கேட்டாள் அவன்.

''பொதுவாகவே ஆடவர்களாகிய நீங்கள் ஓரவஞ்ச னைக்காரர்கள். சீதை இராமன் இருவர் கண்களுமே ஒன்றை யொன்று உண்டன என்பதுதான் உண்மை.

எண்ணரு நலத்தினாள் இனையன் நின்றுழி
கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்.

இதுதான் பாட்டு. நீங்கள் சீதை கண்களை மட்டும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கூறிக் கண்கள் சிவந்தாள் அக்காரிகை.

''நீ கூறிய கம்பராமயணப் பாடல் மிகவும் சுவையாக இருக்கிறது. ஆனால் கண்களைப் பற்றி அதில் கூறிய கருத்துகள் இயல்புக்கு மாறாக உள்ளன'' என்று கூறினான் அவன்.

''அப்படியா?'' என்று கூறிப் புருவவில்களை வளைத் தான்.

"இராமனும் சீதையும் முதன் முதலாகச் சந்திக்கிறார்கள். அவர்கள் கண்களும் முதன் முறையாகச் சந்திக்கின்றன முதலிலேயே பழக்கப்பட்ட காதலர்கள் கண்கள் தாம் ஒன்றையொன்று கவ்வும்; உண்ணத் தொடங்கும். முதற் சந்திப்பில் பார்வை தெரிக்கும். இது வயதுவந்த ஒவ்வொரு ஆடவனும் பெண்ணும் அறிந்த முதற் காதற் பாடம். ஏன்? நாம் கல்லூரி வகுப்பில் பாடம் பயின்றபோது நீஎன்னையே கண்களாலலால் விழுங்குவது போலப் பார்த்துக்கொண்டிருப்பாய். நான் முகத்தைத் திருப்பி உன்னைப் பார்த்ததும் நீ சட்டென்று புத்தகத்தைப் பார்ப்பாய். கண்களின் இவ்வியல்பை நன்குணர்ந்த வள்ளுவப்பெருந்தகை

யான் நோக்குங்காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்— 1094

என்று பாடினார்" எனக் கூறிக் குறும்பாகச் சிரித்தான் அவன்.

"போதும் உங்கள் குறும்பு" என்றாள் அவள். நாணத்தால் குங்குமச் சிவப்பு அவள் முகத்தில் குதித்தது.

"இதே முதல் பார்வைச் சந்திப்பைப் பாவேந்தர் எவ்வளவு உணர்ந்து இயல்பாகப்பாடி இருக்கிறார் தெரியுமா?

பாடம் படித்து நிமிர்ந்த விழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி!
ஆடைதிருத்தி நின்றாள் அவன்தான்-இவன்
ஆயிரம் ஏடு திருப்புகிறான்.

எப்படிப் பாட்டு? என்று கேட்டான் அவன்.

"பாடலில் விழும் ஒரு கருத்து, எழுதும் புலவனின் அப்போதைய உள்ள உணர்வின் சூழலையும் வெளிப்பாட்டையும், பொருத்தது. பாவேந்தர் தலையை நீவிக்

கொடுப்பதும், கம்பன் தலையைக் கொட்டுவதும் எப்போதுமே உங்கள் இயல்பு'' என்றாள் அவள்.

''அப்படியில்லை! நயம் கருதிச் சொன்னேன்' என்றான் அவன்.

''கண்கள் பல நேரங்களில் தொல்லை கொடுத்தாலும். சில நேரங்கள் மிகவும் நன்மை செய்கின்றன'' என்றாள் அவள்.

'எப்படி? என்றான் அவன்.

''கண்கள் விழித்திருக்கும் போது, உங்களைக்காணாமல் அழுதாலும், தூங்கும்போது உங்களைக் கனவில் கொண்டு வந்து நிறுத்துகின்றன நனவில் காணமுடியாத உங்களைக் கனவில் கண்டு, உங்கள் பிரிவு என்னை எப்படி யெல்லாம் வருத்துகிறது என்று நான் கூறுவது வழக்கம். அந்த வகையில் துணை செய்யும் இக்கண்களுக்கு என்னால் நன்றி கூறாமல் இருக்க முடியவில்லை. இந்தக் கனவு தரும் இன்பத்துக்காக நீங்கள் இல்லாத நாட்களில் நான் எப்போதும் தூக்கத்திலேயே இருக்கக் கூடாதா என்று எண்ணுவதுண்டு'' என்று நாணத்தோடு கூறினாள் அவள்.

''வள்ளுவர் இக்கருத்தை எவ்வளவு அழகாக உணர்ந்து பாடியிருக்கிறார் தெரியுமா? யார் யாரையோ காதல் மன்னன்' என்று சொல்லுகிறார்கள். அப்பட்டத்திற்கு மிகவும்' பொருத்தமானவர் வள்ளுவப் பெருமான்தான்'' என்றான் அவன்.

''என்ன அப்பாட்டு?'' என்று ஆவலோடு கேட்டாள் அவள்.

கயல் உண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்—1212

என்று அழகாகப் பாடியிருக்கிறார். காதலன் இல்லாத நேரத்தில் இக்கனவுதான் பெண்களுக்கு பெரிதும் கை கொடுக்கிறது'' என்றான் அவன்.

''விளக்கமாகச் சொல்லுங்கள்.' என்றாள் அவள்.

''தூங்கும்போது கணவனைத் தோள் மேல் கொண்டு வந்து சேர்த்து அவளை இன்பத்தில் ஆழ்த்துவது இக்கனவு தானே! அதை உணர்ந்துதான் வள்ளுவர்

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்துள் ஆவர் விரைந்து —1218

என்று பாடியுள்ளார், இக்குறளை நீ படித்ததில்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''உண்மைதான்! சில நாட்களில்......போங்கள்... எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்கிறது!'' என்று கூறி மலர்க்கொம்பு மதியை மறைப்பது போல், முகத்தைத் தன் கையால் பொத்திக்கொண்டு விரலிடுக்கில் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

முகத்தை மறைத்த நாணத்தை முத்தத்தால் அவன் விலக்கினான்.

நாணம் ந
ழு
வி
ய
து
! ! !

8. அடிசிற்கு இனியவள்

அன்று அவனுக்கு—
என்ன வந்தது என்று புரியவில்லை.
கொத்தவால் சாவடிபோல்
எப்போதும்.
ஆரவாரமாக இருந்து பழக்கப்பட்டவன் அவன்.
அன்று ஏனோ
எலியட்.கடற்கரை போல்
அமைதியாகக் காணப்பட்டான்.
வரும் போதே கன்றுக் குட்டிபோல்
அவளை வந்து
முட்டும் பழக்க முள்ளவன அவன்.
அன்று ஏனோ
முகத்தில் சலனமின்றிக் காணப்பட்டான்.
அவன்
அளவுக்குமீறி அமைதியாக
இருக்கும் வேளைகளில்
அவள் அஞ்சி நடுங்குவாள்.
அவள்—
அதற்கும் இதற்கும்
வேகமாக நடந்தால் கூட
அவள் உள்ளம் அதிரும்.

அது போன்ற வேளைகளில்—
இல்லத்தில் ஒருவித இறுக்கம் ஏற்படும்.
முகத்தை நேருக்கு நேர்
எதிர்கொள்ள முடியாத
ஒரு மேகமூட்டம் சூழ்ந்துகொள்ளும்.
எதனால் அவன்
அப்படி இருக்கிறான்?
வேலை செய்யுமிடத்தில்
ஏதேனும் குழப்பமாக இருக்கலாம்?
எதிர்பார்ப்புகள்
ஏமாற்றங்களாக மாறியிருக்கலாம்?
மேலதிகாரிகள்
மிரட்டியிருக்கலாம்?
சுற்றியிருக்கும் உலகத்தின்
சூடு தாங்காமல்,
நத்தையைப் போல் அவன்
ஓட்டுக்குள் பதுங்கியிருக்கலாம்.
அப்பொழுதெல்லாம் ஆடவர்கள்
அப்படித்தானே இருப்பார்கள்.
அவள்—
அமைதியாகத் தலைவாழைக் குருத்தை
விரித்துப் போட்டாள்.
அந்த இலைகூட அன்று அவளிடம்
ஓரம் சுருண்டு சுருண்டு
முரண்டு பிடித்தது.
தண்ணீரைத் தெளித்து
அன்போடு நீவிக் கொடுத்தாள்.
அப்போதும் அது பணியவில்லை.

குவளைத் தண்ணீரை எடுத்து
அதன் தலையில் கொட்டுவைப்பதுபோல்
லொட்டென்று வைத்துப்
பரிமாறத் தொடங்கினாள்.
அன்று—
அவனுக்குப் பிடித்த மோரீக்குழம்பு.
வெட்டி எடுத்த
நீர்ப்பூசணித் துண்டங்கள்
பனிக்கட்டிப் பாலங்களாகக்
குழம்பில் படுத்திருந்தன.
எண்ணெய்த் தாளிப்புக்கு நடுவே
பவழத் துண்டுபோல்
மிளகாய் வற்றல் மிதந்து கொண்டிருந்தது.
அவரைக்காய் மரகதப் பொரியலும்,
கலப்பு மணங் கமழக்
கருத்தோடு சமைத்த அவியலும்
இலையை அணி செய்தன.
இவ்வளவு சுவையான உணவைத்
தாழியில் தலையைவிட்ட மாடுபோல்
குனிந்தவண்ணம் மென்றுகொண்டிருந்தான் அவன்.
கணவன் இப்படிப்
பனிக் கட்டியாக உறைந்திருக்கும் நேரத்தில்
எதையாவது சொல்லி
அவன் உள்ளத்தில் சூடுண்டாக்கி
அவனைப் பழைய நிலைக்குத்
திருப்புவது அவள் வழக்கம்.
எனவே—
'ஏனுங்க...' என்று

மெதுவாகக் குரல் கொடுத்தாள் அவள்.
'ஊம்...' என்று
முணகினான் அவன்.
'மோர்க்குழம்பு எப்படி?'
என்றாள் அவள்.
'நல்லாருக்கு...' என்றான் அவன்.
'என்ன நல்லாருக்கு...? அவ்வளவு தானா?
நான் எவ்வளவு தொல்லையெடுத்துக் கொண்டு
உங்களுக்குப் பிடித்தமான மோர்க்குழம்பைச்
சமைத்திருக்கிறேன்! அதைப்பற்றிப்
பாராட்டி ஒரு சொல்கூட நீங்கள் கூறவில்லையே?'
என்றாள் அவள்.
'எங்கே உன் கையைக் காட்டு, பார்க்கலாம்!'
என்று குறும்பாகக் கேட்டான் அவன்.
அவள் கையை நீட்டினாள்.
'எங்கே உன் விரல்கள் சிவக்கக்
காணோமே?' என்றான் அவன்.
அவள் விழித்தாள்.
'முகம் வியர்த்திருக்கிறது!
சமையல் செய்யும் போது
கையைக் கழுவாமல்
சேலையில் துடைத்துக் கொண்டது
கறையாகத் தெரிகிறது!'—ஆனால்
விரல்கள் மட்டும் சிவக்கவில்லை!'
என்று கூறிச் சிரித்தான் அவன்.
விரல்கள் ஏன் சிவக்கவேண்டும்?'
என்று வியப்போடு கேட்டாள் அவள்.

'உன்னைப் போல் ஒரு தலைவி
மோர்க்குழம்பு வைத்த நிகழ்ச்சி
குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.
அப்பாடல் தெரியுமா?' —என்று கேட்டான் அவன்.
அவளுக்கும் அந்தப்பாடல் தெரியும்,
என்றாலும்,
அப்பாடலைக் கொண்டே அவனை
மடக்க வேண்டும் என்று விரும்பினாள்.
'பாடலைச் சொல்லுங்கள் கேட்போம்!'
என்றாள் அவள்.
அவன் சொன்னான்
*முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

"காந்தள் மலர் மென்மையானது; குருதிபோல் சிவப்பானது. கட்டித் தயிரைப் பிசைந்ததால், அவள் விரல்கள் சிவந்துபோய் விட்டன. அவ்வளவு மென்மையானவை அவள் விரல்கள். அதனால்தான் புலவன் 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்றான். உன் விரல்கள்..." என்று கூறிச் சிரித்தான் அவன்.

"என் விரல்கள் முரட்டுத்தனமான முற்றிய முருங்கைக் காய்...அப்படித்தானே!" என்று பொய்க் கோபம் காட்டிச் சிணுங்கினாள் அவள்.

"அப்படி நான் சொன்னேனா?" என்றான் அவன்.

---

* குறுந்தொகை பாடல் 167—கூடலூர் கிழார்.

''மனைவியின் விரலை இலக்கியத் தலைவியின் விர லோடு ஒப்பிட்டுக் கிண்டல் செய்யத் தெரிந்த உங்களுக்கு, அப்பாடலில் உள்ள தலைவனின் அரும் பண்பு புலப் படவில்லையே!'' என்றாள் அவள்.

''அது என்ன? எனக்குப் புலப்படாத அரும் பண்பைத் தலைவனிடமிருந்து நீ கண்டுபிடித்துவிட்டாய்?''—என்று கேட்டான் அவன்.

இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே!

என்ற வரிகளைக் கூர்ந்து கவனித்தீர்களா?

அந்தத் தலைவன் மோர்க்குழம்பைச் சுவைத்துச் சாப்பிடும்போது 'இனிது! இனிது!' என்று பாராட்டிக் கொண்டே சாப்பிடுகிறான் தலைவி அதைக் கேட்டு முகமலர்ச்சியோடு எதிரே இருந்து பரிமாறுகிறாள். நீங்கள் நான் வைத்த மோர்க்குழம்பைப் பற்றிப் பாராட் டாக ஒரு சொல் சொன்னீர்களா?' என்று கேட்டான். அவள் கண்களில் நீர் கோத்துக்கொண்டது.

''ஓ...! அதைச் சொல்லுகிறாயா? பாராட்டத்தான் வேண்டும் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வா! பெண்களை எப் போதும் படுக்கை அறையில்தான் பாராட்ட வேண்டும்!'' என்று குறுஞ் சிரிப்போடு கூறினான் அவன். அவன்பேச்சில் இருந்த அவசரம் அவளுக்கு புரிந்தது.

அவன் தலையணை மீது தலைசாய்த்து நிமிர்ந்து படுத் திருந்தான். அவன் மாரிபையே தலையணையாக்கி அவள் படுத்திருந்தாள்.

சற்று நேரத்துக்கு முன்னிருந்த இறுக்கம் இளகி இருந்தது.

பனிக்கட்டியாக உறைந்து போயிருந்த அவனுடைய உள்ளம், அவள் வெப்பப் பெருமூச்சால் உருகி இன்ப அருவி யாகப் பெருக்கெடுத்தது.

அவன் பேசினான்;

"என்ன..."

"ஊம்... சொல்லுங்க!

"ஒரு பெண்ணின் முதல் தகுதி என்ன தெரியுமா?"

"சொன்னால்தானே தெரியும்."

"நன்கு சமைக்கத் தெரிய வேண்டும்!"

"அப்ப...பெண்ணுங்குற சொல்லை மாற்றி மனை வின்னு சொல்லுங்க. ஏன்னா...சமைக்கவே தெரியாத பெண்கள் உலகத்திலே எத்தனையோ பேர் இருக்காங்க. அப்ப...அவங்கெல்லாம் பெண்ணே அல்லன்னு ஆயிடும்!"

ஆண்கள் எப்பவுமே சாப்பாட்டுராமர்கள்.

சுவையாகச் சமைக்கத் தெரிந்த மனைவி எளிதாகக் கணவனைக் கைக்குள் போட்டுக் கொள்வாள்.

ஓர் ஆங்கில அறிஞன் சொல்லுகிறான்...

"என்ன ஆண்கள் எல்லாம் சாப்பாட்டுராமர்கள் என்றா...?"

"இல்லையில்லை! சுவையாகச் சமைக்கத் தெரிந்த பெண் கணவன் உள்ளத்தில் நேரடியாக இடம் பிடித்து விடுகிறாள் என்று."

"அப்படியென்றால்...கணவன் உள்ளத்தில் இடம் பிடிக்கக் குறுக்கு வழிவேறு இருக்கும்போல இருக்கு..." என்று கூறிச் சிரித்தாள் அவள்.

''குறுக்கு வழியும் இருக்கு...அது என்னவென்று உனக்கே தெரியும்!'' என்றான் அவன். அவன் பேச்சில் குறும்புத்தனம் இருந்தது.

''சரி! சொல்லுங்கள்! என்றாள் அவள்.

''வள்ளுவர் கூடச் சாப்பாட்டுராமர்தான்!—என்றான் அவன்.

இக்கூற்றைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

படுத்திருந்த அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''என்னங்க...வள்ளுவர்மீது இவ்வளவு பெரிய அபாண்டத்தைத் தூக்கிப் போடறீங்க? என்றாள் அவள்.''

''பின் என்ன?''...மனைவி இறந்தபோது வள்ளுவர் வருந்திப் பாடியதாக ஒரு பாடல் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகிறது.

அடிசிற்கு இனியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய் — அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

— என்பது அப்பாடல். வள்ளுவருடைய மனைவியிடத்தில் பொருந்தியிருந்த எத்தனையோ உயர்ந்த பண்புகள் இப்பாட்டில் குறிப்பிடப்படுகின்றன.

அவள் அன்புடையவள்!

கணவன் சொல் தவறாத பணிவுடையவள்!

இல்லப் பணிகளை இரவில் முடித்து — கணவனைத் தன் பணிவிடையால் உறங்க வைத்துவிட்டு அதற்குப்பின் உறங்கும் உயர்ந்த பண்பினள்.

என்றாலும்—

விடியலில் கணவன் எழுவதற்கு முன் எழும் பழக்கமுடைய இல்லத்தரசி!

இத்தனை அரும்பண்புகள் அவளிடத்தில் பொருந்தியிருந்தாலும், அவற்றையெல்லாம் முதலில் குறிப்பிடாமல் பாடலில் எடுத்தவுடன்,

"அடிசிற்கு இனியாளே!" என்றுதானே குறிப்பிட்டு வருந்துகிறார் வள்ளுவர்.

மனைவியின் இறப்பால் அவருக்கு ஏற்பட்ட முதல் பாதிப்பு, இனிச்சுவையாகச் சமைத்துப்போட ஆளில்லை என்பதுதானே. அதனால்தான் வள்ளுவரையும் 'சாப்பாட்டு ராமர்' என்றேன் நான்—என்று கூறினான் அவன்.

"இப்பாடலைப் பாடியவர் வள்ளுவர் இல்லை. திருவள்ளுவ நாயனார் என்ற சாப்பாட்டு ராமர்" என்று கூறிச் சிரித்தாள் அவள்.

"என் நண்பன் ஒருவன் எம். எஸ். சி., பட்டம் பெற்ற ஒரு பெண்ணை மணந்து கொண்டான்."

பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த அப்பெண்ணுக்கு அரைகுறையாகச் சமைக்கத் தெரியும்.

திருமணம் ஆனதும் புதுக் குடித்தனம் வைத்தனர் பெற்றோர்கள்,

முதல் நாள் அவள் தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள், ''உங்களுக்கு என்ன பிடிக்கும்?'' என்று.

''எனக்குக் குவாலி பிளவர் கறி என்றால் மிகவும் பிடிக்கும்'' என்று அவன் சொன்னான்.

பெரிய, ஊட்டி குவாலி பிளவர் ஒன்று வாங்கிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அலுவலகம் சென்று விட்டான். அவள் அதை மிகவும் பொறுப்போடு சமைத்து வைத்தாள்.

இடைவேளையில் அவன் சாப்பாட்டுக்கு வந்தபோது அன்போடு அவள் உணவு பரிமாறினாள். தன் புது மனைவி பரிமாறிய குவாலி பிளவர் கறியின் ஒரு துண்டை எடுத்து ஆர்வத்தோடு வாயில் போட்டான். ஒரே நாற்றம்! அவனுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. தூ...என்று துப்பி விட்டான். எப்படியிருக்கும் அவளுக்கு? அவள் முகம் விழுந்துவிட்டது.

''என்ன குவாலி பிளவர் இப்படிக் கெட்டவாடை வீசு கிறது? என்ன செய்தாய்?'' என்று அருவருப்போடு கேட்டான் என் நண்பன்.

''என்னங்க...எவ்வளவு பொறுப்போடு உங்களுக்காக இதைச் சமைத்தேன் தெரியுமா? குவாலி பிளவரை அரிந்த போது அதில் பெரிய பெரிய புழுக்கள் இருந்தன. நான் அரிந்த பூவைக் கிருமிக் கொல்லியாகிய 'டெட்டாலில்' ''போட்டு நன்றாக கழுவிவிட்டும் பக்குவமாகச் சமைத் தேன் என்றாள் அப்பேதை!'' என் நண்பனுக்கு அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை; —என்று கூறி நிறுத்தினான் அவன்.

''என்ன இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு குறும்பு ஆகாது. படித்த பெண்கள் எல்லோருக்குமே நன்றாகச்

சமைக்கத் தெரியும் என்று நான் கூறவில்லை. அதற்காக இப்படியா அவர்களைப் படுமோசாக கிண்டல் செய்வது?' என்று கூறினாள் அவள்.

"பாட்டுக் கலையைப் போலச் சமையலும் ஓர் ஒப்புயர்வற்ற கலை; இதற்கும் கற்பனையும் அமைதியும், பொறுப்புணர்ச்சியும் பட்டறிவும் வேண்டும். அப்போது தான் சமையல் சிறப்பாக இருக்கும். இல்லாவிட்டால் அறுபத்திநான்கு கலைகளில் ஒன்றாக இதையும் சேர்த்திருப் பார்களா? வீமனும், நளனும் சமையல் கலையில் வல்லவர் களாம். அவர்கள் சமைத்த முறைக்கு நளபாகம், வீமபாகம் என்று பெயர். இன்று நம் பல்கலைக் கழகத்தில் உணவை எவ்வாறு படைப்பது என்பதற்கு ஒரு பட்டப்படிப்பே உண்டு. அதற்கு Catering Technolegy-என்பது பெயர்" என்று ஒரு சொற்பொழிவே செய்தான் அவன்.

"தமிழ் இலக்கியங்களில் சமையலுக்கெனத் தனி இலக் கியம் உண்டா?" என்று கேட்டாள் அவள்.

"இன்று சமையற்கலை பற்றித் தமிழில் நிறைய நூல் கள் வெளிவந்திருக்கின்றன. சமையலைப் பற்றிய சுவை யான குறிப்புகள் இலக்கியங்களில் நிறையக் கூறப்பட் டுள்ளன. பாவேந்தரின் குடும்ப விளக்கு தமிழில் ஒப்புயர் வற்ற ஒரு சிறந்த நூல். தமிழ்த் தாய்க்கு வேறு எந்தப் புல வனும் பூட்டாத புதிய அணி. அதில் விருந்தோம்பல் பகுதியில் மாமியார் மருமகளுக்குக் கூறும் அறிவுரையாகப் பாடப்படும் பகுதி சமையல் கலைக்கு ஒருவைரப் பெட்டகம்'

காய்கறி வாங்குவதில்கூடக் குடும்ப விளக்கின் தலைவி எவ்வளவு அக்கறை காட்டுகிறாள் என்பதைப் பாவேந்தர் குறிப்பிடும்போது,

கொண்டவர்க்கு எது பிடிக்கும்
குழந்தைகள் எதை விரும்பும்
தண்டுன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன

உண்பதில் எவரு டம்புக்(கு)
　　எதுஉத வாதென் றெல்லாம்
கண்டனள், கறிகள் தோறும்
　　உண்பவர் தம்மைக் கண்டாள்.
உருளைநற் கிழங்கில், தன்னை
　　உடையானுக் கிருக்கும் ஆசைத்
திருவுளம் எண்ணி எண்ணிச்
செவ்விள நகைசெய் கின்றாள்.

பாவேந்தர் உண்பதில் பெரிய சுவைஞர். கலித்தொகைப் பாடலைச் சுவைப்பது போல் கறியையும் சுவைத்துச் சாப்பிடுவார். இலையில் பரிமாறப்படும் பொரியலுக்குத் தமிழ்ப் புலவர்களில் வேறு யாரும் உவமை சொன்னதாகத் தெரியவில்லை. பாவேந்தர் மட்டுமே—

　　'பொரியலோ பூனைக் கண்போல்
　　பொலிந்திடும்'—

என்று உவமை கூறுகிறார்''—என்று சொன்னான் அவன்.

''இதைப் பற்றி வள்ளுவர் ஏதும் கூறவில்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''ஏன் கூறாமல் உலகத்தைத் தம் குறளால் அளந்த வள்ளுவர் உணவைப் பற்றிச் சொல்லாமல் இருப்பாரா? வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறும்போது 'தற்கொண்டான் பேணி' என்ற இரண்டே சொற்களால், நான் மேலே கூறிய எல்லாக் கருத்துக்களையும் அடக்கிவிடுகின்றார், வள்ளுவர். உரையாசிரியர்களும் தன் கணவனை உண்டி முதலியவற்றால் பேணி' என்றுதானே அத்தொடருக்குப் பொருள் விரிக்கிறார்கள்''—என்று விளக்கினான் அவன்.

9. அமிழ்தினும் இனியது

இரட்டைக்கட்டில்!
நடுவில் நெகிழ (Rubber) விரிப்பு
அதில் ஒரு பிடி வெள்ளி, மேலே மினுக்கும் விளக்கை
வேடிக்கை பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.
அந்நிலாப் பிஞ்சு
கால்களை உதைத்துக்
கைகளை அசைத்து விளையாடியது.
அப்படுக்கை வானவில்
பாலொழுகும் வாயைத்திறந்து
யாழ் போல் ஓசை நயத்தோடு அழுதது.
அதன் இரண்டு பக்கமும்
நான்கு விழிகள்
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.
அவன்—
அந்த அமிழ்துச் சிலையை
ஆர்வத்தோடு கையில் எடுத்தான்.
'மெள்ள......மெதுவாகத் தூக்குங்கள்!
குழந்தையை இப்படியா தூக்குவது!'
என்று அவள் அவனைக் கடிந்து கொண்டாள்.
"பின் எப்படித் தூக்குவது?"
என்று கேட்டான் அவன்!
"குழந்தையின் தலை தாமரைப்பூ!

உடல் தண்டு!
தண்டு தாமரைப்பூவின்
கனத்தைத் தாங்குமா?
துவண்டு வளைந்து விடாதா?''
என்றாள் அவள்,
'அழகான உவமை'
என்று அன்போடு சொன்னான் அவன்,
'இதை நான் சொல்ல வில்லை.
பாவேந்தரின் குடும்பவிளக்கின் தலைவி
தன் கணவனிடம் சொல்லுகிறாள்'
என்றாள் அவள்.
'அப்படியா?'
ஆமாம்! குழந்தை ஒரு பச்சை மண் கலம்!
அதைப் பக்குவமாக எடுக்க வேண்டும்' என்றாள் அவள்
'குழந்தையை எப்படி தூக்குவது? என்றெல்லாம்
பாவேந்தர் பாடியிருக்கிறாரா' என்று
வியப்போடு கேட்டான் அவன்.
அவள் பாட்டைப் பாடினாள்;

குளநீர்த் தாமரை குழந்தையின் இளந்தலை!
அம்மலர் தண்டே அழகிய மெல்லுடல்;
தண்டு மலர்த்தலை தாங்குமா அத்தான்?
தலை உடல் இரண்டையும் ஒருங்கு தாங்கி
உலை அமிழ்தை வறியவள் ஒருத்தி தூக்கல்போல்
தவறாது தூக்குவது தலையா கியகடன்.
தெரிந்ததா அத்தான் என்றாள் தெரிவை!
அவள் சொன்னபடி குழந்தையை எடுத்துக்
கன்னத்தில்! சாய்த்துக் கொண்டான் அவன்.
'அத்தான்[குழந்தை உங்களைப் போலவே
இருக்கிறான்!' என்று பூரிப்போடு சொன்னாள் அவள்

*'இளங்காலை, பகற்பொழுதை
எப்படிக் காட்டுகிறதோ, அதைப் போல்
குழந்தைப் பருவம் மாந்தனைக் காட்டுகிறது'
என்றான் மில்டன்.

என் இளங் காலைப் பொழுதான இக்குழந்தை
என்னைக் காட்டாமல் வேறு யாரைக் காட்டும்?
என்று கூறிச் சிரித்தான் அவன்.
'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்.'
என்று வள்ளுவர் உணர்ந்து பாடியிருக்கிறார்.
என்றான் அவன்.
'ஏன்? மனைவி மெய்தீண்டல் உடற்கின்பம்
இல்லையா?' என்று குறும்பாகக் கேட்டாள் அவள்.
'இன்பந்தான்! நீ சுடுநீர்;
குழந்தை பனிநீர்! இரண்டும்
அந்தந்த நேரத்துக்கு
இதமான இன்பந்தானே!'—என்றான் அவன்.
'உங்களால் குறும்பில்லாமல்
பேசத் தெரியாதே!'—என்று கூறிக்
குறுஞ்சிரிப்பை உதிர்த்தாள் அக் கோலமயில்.
'நேற்று இரவு உன்னை நான்
எழுப்பியது உனக்கு நினைவிருக்கிறதா?
என்று கேட்டான் அவன்.
'ஏன்? என்று கேட்டாள் அவள்.
'உணர்வுகள் என்னை எழுப்பியதால்
நான் உன்னை எழுப்பினேன்.
ஆனால் நீயோ...
உன் புதிய காதலனை அணைத்தவண்ணம்
மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தாய்' என்றான்
அவன்.

---

*The childhood shows the man as monning shows the dny
—Milton

'ஓ! குழந்தையைச் சொல்கிறீர்களா?
இருந்தாலும் உங்களுக்கு
இவ்வளவு பொறாமை கூடாது!' என்றாள் அவள்.
என் காதற் பங்காளியின் மீது
எனக்குப் பொறாமையில்லாமல்
இருக்குமா? பிள்ளை.. தொல்லை!"
என்றான் அவன்.

"உங்களுக்குத் தொல்லை; ஆனால் எனக்கு...உங்கள் தொல்லையிலிருந்து என்னை மீட்க வந்தவன்..." என்றாள் அவள்.

"நேற்று இரவு குழந்தையை அணைத்த வண்ணம் நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாய், அணைத்திருந்த உன் கையை நான் மெதுவாக விலக்கினேன்.

ஆனால்....

உறக்கத்திலும் உன் கை மீண்டும் அவனையே அணைத்துக் கொண்டது" என்று கூறி பெருமூச்சு விட்டான்.

"அதுதான் தாய்மையின் இயல்பு."

உறங்கும்போது கூடக் குழந்தையின் மீது ஓர் எறும்பு ஊர்ந்தாலும் தாய்க்கு அது தெரியும்.

"பாவேந்தர் தமது குடும்ப விளக்கில் தாய்மையின் ஆற்றலை மிகவும் நுட்பமாக ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்."

தலைவி ஒருக்கணித்துப் படுத்திருந்தாள்.
குழந்தை அவள் அடிவயிற்றில் ஒட்டிப் படுத்திருந்தது.
இக்காட்சியைக் கணவன் கண்டான்.

அவள் கொஞ்சம் புரண்டாலும் குழந்தை அவளடியில் சிக்கிக் கொள்ளுமே என்று அவன் அஞ்சினான்.

அவளைத் துயிலுணர்த்திச் சரியாகப் படுக்கச் சொல்ல வேண்டும் என்று எண்ணினான் கணவன்.

அவள் களைந்து எறிந்திருந்த பூச்சரம் கட்டிலில் கிடந்தது.

அதை எடுத்து அவள் முகத்தில் போட்டான், அவளை துயிலுணர்த்துவதற்காக.

ஆனால் அவள் விழிக்கவில்லை; நன்றாக உறங்கினாள்.

பின்னர்—

அதே மலர்ச் சரத்தை எடுத்துக் குழந்தையின் மீது போட்டான்.

உடனே அவள் கை குழந்தையின் மீது விழுந்த மலர்ச் சரத்தைத் தட்டி விட்டு விட்டுப் பழையபடி அணைத்துக் கொண்டது.

தூக்கத்தில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சியைப் பார்த்து வியந்து போனான் கணவன்.

''தலைமட்டும் இரண்டென் றாலும்
குழந்தையும் தாயும் ஒன்றைக்
குலையேயாம் உயிரும் ஒன்றே!
உள்ளத்தின் கூறும் ஒன்றே!''

என்று கூறி மகிழ்கிறான் கணவன்'' — என்று அவள் சொன்னாள்.

''சரி? குழந்தை தூங்கிவிட்டது' என்று கூறிப் படுக்கையில் மெதுவாக அந்த மலர் மாலையைக் கிடத்தினான் அவன்;

பின்னர் அவன் கழுத்தில் அவள் மாலையானாள்.

10. அடக்கிப்பார் அல்லது அடங்கிப்போ!

"என்ன? இன்று—
பக்கத்து வீட்டில் பட்டிமண்டபமா?"
என்று பலகணியில் பார்த்தவண்ணம்
அவளைக் கேட்டான் அவன்.
"ஆமாம்!
பக்கத்து வீட்டுப் பட்டிமண்டபம்
சற்றுக் காரசாரமாக நடைபெறுகிறது"
என்றாள் அவள்.
"கணவன் மனைவி இரண்டுபேருமே
பட்டம் பெற்ற பேராசிரியர்கள்.
அவர்களிடையில் சொற்போருக்குப்
பஞ்சமா என்ன?
இரண்டு பேருமே நஞ்சில் தோய்த்தெடுத்த
கூரிய சொல்லம்புகளால் குறிதவறாமல்
அடித்துக் கொள்கிறார்கள்!"
என்று கூறிச் சிரித்தான் அவன்.
"ஏன் அத்தான்?
நாள்தோறும் போராடும்படி
இவர்களிடம் அப்படியென்ன
கருத்து வேறுபாடு தோன்றமுடியும்?"

என்று வியப்போடு கேட்டாள் அவள்.
“குடும்ப வாழ்க்கை—
இன்று ஒரு தேர்தல் மாதிரிதானே?
ஆட்சிப் பீடத்தை யார் பிடிப்பது
என்ற போராட்டந்தான்.
பெண்களை மெல்லியலார் என்று சொல்வது
இலக்கிய வழக்கு.
இன்றைய பட்டப்படிப்பும்
ஆடவர்களோடு ஒப்பப்பழகும் பழக்கமும்
பெண்டிரின் மென்மைத் தன்மையை
ஓரளவு குறைத்து விடுகிறது.
சம்பாதிக்கும் பெண்கள்
தங்கள் உரிமையை நிலைநாட்டும்
உணர்வோடு நடந்து கொள்ளத் தொடங்குகின்றனர்.
அதனால் எழும் சிக்கலே
குடும்பப் போராட்டமாக மாறுகிறது”
என்றான் அவன்.
படித்து, பட்டம் பெற்றுத் தொழில்புரியும் பெண்கள்
வெளிஉலகில் பழகும்போது
போலியாக நாணவும் வேண்டியிருக்கிறது.
அதே போலக் கணவனிடமும்
அவர்கள் நடந்து கொள்ளும் போது
இயல்பான அவர்கள் மென்மை குறைந்துவிடுகிறது.
போலித்தனம் இல்லாமல்
நாணிச் சிரிக்கும் ஒரு பெண்
கொம்பிலே கனிந்து தொங்கும்
பழத்தைப் போன்றவள்.

போலிச் சிரிப்புக்காரி
கடையில், கண்ணாடிப் பெட்டிக்குள்
வண்ணத் தாளில் சுற்றிவைக்கப்பட்ட
பழத்தைப் போன்றவள்.
ஒரு பெண் இயல்பாக நாணிச்
சிரிக்கும் அழகுக்கு ஒப்பாக
வேறு எதையும் சொல்ல முடியாது!''
என்றான் அவன்.
'' எப்போதுமே உங்களுக்குச்
சம்பாதிக்கும் பெண்ணைக் கண்டால்
பிடிப்பதில்லை! .அதனால் தான்...
என்னைக்கூட நீங்கள்
வேலையில் சேர வேண்டாம் என்று
தடுத்து விட்டீர்கள்! இல்லையா?'' என்றாள் அவள்.
''இங்குதான் நீ தவறு செய்கிறாய்!
நீ விரும்பினால் இன்றைக்கும்
வேலைக்குச் செல்லலாம்;
அதை நான் தடை செய்யவில்லை. ஆனால்...
நீ வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய அளவுக்கு
நம் குடும்பத்தில் பொருள் தட்டு இல்லாதபோது
நீ வேலைக்கு ஏன் செல்ல வேண்டும்?
இந்த நாட்டில்—
வசதியிருக்கும் ஒரு குடும்பத்துப்பெண் வேலைக்குப் போனால்
வசதியற்ற ஓர் ஏழைக் குடும்பத்தைப்
பட்டினி போடுகிறாள் என்பது பொருள்!
' அலுவல் ' ஒரு பெண்ணுக்கு

இன்றியமையாத் தேவையாக இருக்கலாம் ;
ஆனால் ஆபரணமாக இருப்பதை
நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் !
" அலுவல் பார்க்கும் ஆடவனும் பெண்ணும்
உள்ள குடும்பம், உரிமைப் போராட்டம் மிக்க
தொழிற் சங்கமாகத் தானே இன்று இருக்கிறது!
போராட்டமே தங்கள்
வாழ்க்கையாகக் கொண்ட கணவனும் மனைவியும்
வாய்ப்பு நேரும் போது
விருந்தினர் முன்னாலும் வேற்றவர் முன்னாலும்
நண்பர்கள் முன்னாலும்
நடத்திக் காட்டும் 'பச்சோந்தி நாடகம்'
' ஆகா! இவர்களன்றோ இலட்சியத் தம்பதியர் !
என்று எண்ணத் தூண்டுகிறது.
ஆனால்—
இவர்களது ' பொய்ம்மை முயக்கம்
அடுத்த கணமே கசந்து
கலைந்து விடுகிறது.
இந்த அறிவுப் பெருந்தீனிக்காரர்கள்
மேடை கிடைக்கும் போதெல்லாம்
களவியலையும், கற்பியலையும்,
வாழ்க்கைத் துணை நலத்தையும்
வாந்தியெடுக்கத் தவறுவதில்லை " — என்று
ஒரு சொற்பொழிவே நிகழ்த்தி முடித்தான் அவன்
" இது போன்ற குடும்பங்களில்
ஆடவர்கள் தவறு செய்வதில்லையா ?"
என்று கேட்டாள் அவள்.

"ஏன் செய்யாமல்?
ஆடவனும் சரிபங்கு தவறு செய்கிறான்.
ஆடவன் 'கணவன்' என்ற
ஆட்சிப் பீடத்தில் ஏறி அமர்ந்துவிட்ட
மமதையில் தவறு செய்கிறான்.
பெண் தன்னுடைய சொந்தக்காலில்
நிற்க முடியும் என்ற மமதையில் தவறு செய்கிறாள்,
'எனவே இரண்டு பேரும் குற்றவாளிகளே!'
என்றான் அவன்.
"சரி"! இதற்குத் தீர்வுதான் என்ன?
என்று கேட்டாள் அவள்.
"நீ எகிப்தியச் சிந்தனையாளன் ஈசோப்"
எழுதிய நீதிக் கதைகளைப் படித்திருப்பாய்
என்று எண்ணுகிறேன். அவற்றுள்
'ஆட்டுக்குட்டியும் ஓநாயும்' என்ற
கதை நீ படித்தது தானே?
ஓர் ஓடைக் கரையில் ஓர் ஓநாயும்
ஆட்டுக் குட்டியும் தண்ணீர் குடித்துக்
கொண்டிருந்தன
ஓநாய் ஓடையின் மேற்பகுதியிலும்,
ஆட்டுச்குட்டி கீழ்ப்பகுதியிலும் தண்ணீர் குடித்தன.
ஓநாய் சினத்தோடு கேட்டது;
'ஏன் நான் குடிக்கும் தண்ணீரைக் கலக்குகிறாய்?'
என்று
ஆட்டுக்குட்டி அடக்கமாகக் கேட்டது;
ஐயா! ஓநாயாரே!
நீர் குடித்த தண்ணீர்தான்

என்னை நோக்கி வருகிறது.
அப்படியிருக்கும் போது
நான் தண்ணீரைக் கலக்கி விடுவதாகக்
குற்றஞ் சாட்டுவது எப்படிப் பொருந்தும்?—என்று,
உடனே ஓநாய்,
'நீ ஆறு திங்களாக என்னைத்
திட்டிக்கொண்டிருக்கிறாய் !'
என்று அடுத்த குற்றத்தைச் சாட்டியது.
'நான் பிறந்தே ஆறு திங்கள் ஆகவில்லையே !'
என்று அச்சத்தோடு கூறியது ஆட்டுக்குட்டி.
ஆட்டுக்குட்டியின் சமாதானத்தை
ஓநாய் ஏற்றுக்கொள்ளவில்லை.
உடனே அதன் மீது பாய்ந்து கொன்று தீர்த்தது.
படித்த குடும்பங்களில் கணவனும் மனைவியும்
வாய்ப்பு நேரும் போதெல்லாம் ஓநாய்களாக மாறி
ஒருவரை யொருவர்
குற்றவாளிக் கூண்டில் ஏற்றும்
இந்தப் பண்பு அவர்களை விட்டு நீங்க வேண்டும்.
இரண்டாவதாக, கணவன் மனைவியருள்
யார் அறிவும்; ஆற்றலும் மிக்கவரோ,
அவர்தாம் குடும்பத் தலைமை ஏற்க வேண்டும்;
அடுத்தவர் அவர் வழி நடக்க வேண்டும்.
இதில் ஆண் பெண் என்ற வேறுபாட்டுக்கு
இடமே இல்லை.
ஓடியாடிப் பொருள் தேடித்
திறமையாகக் குடும்பம் நடத்தும் பெண்களையும்
நான் பார்த்திருக்கிறேன்.

அப்பெண்கள் இட்ட வேலையைப் பட்டிமாடுபோல்
தலை குனிந்து கொண்டு செய்யும்
ஆடவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். இங்கே
தகுதியும் திறமையும் மிக்க பெண்ணின் கையில்
குடும்ப ஆட்சி தானாகச் சென்று விடுகிறது.
மூன்றாவதாக
கணவன் மனைவி இருவருக்குமே
விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை
இருக்க வேண்டும்.
குறிப்பாக—
மெல்லியலார்க்கு இது மிகவும் தேவை.

''தொப்பென்ற ஓசை கேட்டால்
துயருறும் என்றும், சோற்றில்
உப்பொன்று குறைந்தால் உண்ணல்
ஒழியுமே என்றும், ஒன்றை
ஒப்பெனில் ஒப்பா விட்டால்
உடைபடும் உள்ளம் என்றும்
தப்பேதும் இன்றி என்றன்
தமிழனை அன்பால் காத்தேன்,

என்று பாவேந்தரின் குடும்பவிளக்குத் தலைவி
மிக நாகரிகமாகக் குறிப்பிடுகிறகள்''
என்று கூறினான் அவன்.
''அது சரி! உங்கள் மனைவி
எப்படி இருக்க வேண்டும் என்று
நீங்கள் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.
''கொஞ்சம் சிக்கலான கேள்வி;
இருந்தாலும் சொல்லி விடுகிறேன்.

என் மனைவி......
எனக்காகவே வாழ்பவளாக,
அவளுக்காகவே நான் வாழவேண்டும்
என்று நினைப்பவளாக,
என் வருவாயில்—
உள்ள நிறைவோடு வாழ்பவளாக,
பணி முடித்து நான் களைத்துத் திரும்புகையில்,
அவளும் களைத்துப் போய்ப்
பெரு மூச்சோடு திரும்பாமல்
பவளவாய்ப் புன்னகையைப்
பரிமாறி வரவேற்பவளாக,
குறிப்பாகச் சொன்னால்—
மனைவி என்ற சொல்லுக்கு
முழுமையான பொருளுடையவளாக
இருக்கவேண்டும்''
என்றான் அந்தப் பேராசைக்காரன்.

★

11. அந்தி மலர்கள்

இரவு முழுவதும்
குழந்தை ஓயாமல் அழுது கொண்டிருந்தது.
பசியோ என்று பதைத்துக்
தன் மார்பமுதை ஊட்டினாள்.
மீண்டும் அழுதது,
வயிற்றுக் கோளாறாக இருக்குமோ?
என்று கருதி
'கிரைப் வாட்டர்' கொடுத்தாள்.
மீண்டும் அழுதது.
அடுத்த வீட்டு அலர்மேல் மங்கையின்
அறிவுரைப்படி
பூசாரியைக் கூப்பிட்டுப் பாடம் போட்டாள்.
ஓயாமல் துள்ளித்துள்ளி அழுதது.
மருத்துவரிடம் தூக்கிக் கொண்டு ஓடினாள்.
மருத்துவர் 'சொட்டு மருந்தைக்'
குழந்தையின் வாயில் விட்டு அனுப்பினார்.
மருத்துவ மனையில் அமைதியாக இருந்த குழந்தை
வீட்டுக்கு வந்ததும் வீறிட்டு அலறியது.
அழுகையால்—

குழந்தையின் தொண்டை வறண்டது;
முகம் கிச்சிலிப் பழமாகக்
கன்றிச் சிவந்தது.
அது அழும்போது அவளும் அழுதாள்;
அவள் உடம்பு—
வேதனையால் நடுங்கியது.
நல்லவேளை !
அவள் மாமனாரும் மாமியாரும்
ஊரிலிருந்து திடீரென்று வந்தனர்.
அழுத குழந்தையை—
மாமியார் அன்போடு
பக்குவமாகக் கையில் எடுத்து
அணைத்துக் கொண்டார்.
மாமியாரின் பக்குவமான அணைப்பில்
குழந்தையின் அழுகை சற்று ஓய்ந்தது;
ஆனால் மீண்டும் தொடங்கியது.
கண்ணீர்க் குளமாக இருந்த மருமகளை
ஆதரவோடு அணைத்து
''குழந்தையென்றால்—
நோயில்லாமல் இருக்குமா?
இதற்காக இப்படியா நீ கண் கலங்குவது?
என்று மருமகளுக்கு ஆறுதல் கூறிவிட்டு
குழந்தையை மேலும் கீழுமாக
நோட்டம் விட்டார் மாமியார்.
பச்சைக் குழந்தையின் இடுப்பில்

மூன்று பவுன் கனமான பொன்னாலான அரைஞாண்
இறுக்கிக் கொண்டிருந்தது.
அதன் உறுத்தல் தாங்காமல்
குழந்தை இவ்வளவு நேரம்
அழுது கொண்டிருந்தது.
மாமியாரின் அனுபவ அறிவு கண்டு பிடித்து விட்டது.
அரைஞாணை அவிழ்த்துத்
தளர்த்திக் கட்டினார்;
குழந்தையை மடியில் போட்டுத்
தட்டிக் கொடுத்துத் தாலாட்டுப் பாடினார்.
குழந்தைன் கீரைவிதைக் கண்ணில்
ஒரு கிளுகிளுப்பு !
பாட்டி, வயிற்றில் கைவைத்துக்
கிசுகிசு மூட்டும் போது 'கலீர் கலீர்' என்று சிரித்தது.
பின்னர்—
கண்மூடி அமைதியாக உறங்கியது.
அவள் வியந்தாள்!
மாமியாரின் கை மந்திரக் கை!
அடுத்தநாள்—
மாமனாரும் மாமியாரும்
ஊருக்குக் கிளம்பிவிட்டார்கள்?
மருமகள் எவ்வளவு தடுத்தும்
அவர்கள் பயணத்தைத்
தடுத்து நிறுத்த முடியவில்லை.
"குழந்தையையும் உங்களையும்

பார்க்க வேண்டும் என்ற ஆவல்!
வந்தோம்... பார்த்துவிட்டோம்...
கிளம்புகிறோம்...''...
என்று மாமியார் சுருக்கமாகச் சொன்னார்.
அவனும்—
''ஏனம்மா...! ஏப்பா!
இன்னும் இரண்டுநாள் தங்கிப் போனால் என்ன?''
என்று பெற்றோரிடம் கூறவில்லை;
பேசாமல் இருந்தான்.
அவன் அவ்வாறு இருந்தது.
அவளுக்கு வியப்பாக இருந்தது
மாமன் மாமியை
வழியனுப்பி விட்டு
அவள் அவனைப் பார்த்து—
''உங்கள் பெற்றோரை
இன்னும் இரண்டு நாள் இங்கு
இருந்து விட்டுப் போகும்படி சொன்னால்
உங்கள் வாய்முத்து உதிர்ந்து விடுமா?''
என்று கேட்டாள்.
அவன் சிரித்தான்!
''உனக்கு—
என் பெற்றோரைப் பற்றித் தெரியாது.
அவர்கள் எப்போதும்,
யார் வீட்டிலும்,
ஒரு நாளைக்கு மேல் தங்கும் வழக்கம் இல்லை''
என்றான் அவன்.

'ஏன்?' என்று
கேட்டாள் அவள்.
''அந்த வானம்பாடிகளுக்கு
அவர்கள் கூடுதான் சொர்க்கம்!
தாமரைக் கண்ணான் உலகம்! எல்லாம்!
என் தந்தை படிப்பார், எழுதுவார்.
மற்ற நேரங்களில் —
சமையலறையில் உள்ள என் தாயாரை
சுற்றிச் சுற்றி வருவார்!
சுவையாகக் கிண்டல் செய்வார்;
சிறு சண்டை போடுவார்;
அவருக்குப் பொழுதுபோக்கும்
கேளிக்கையும் இதுதான்:'— என்றான் அவன்
'இந்த வயதிலுமா?'
என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.
''காதலுக்கு வயது கிடையாது;
இளமைக் காதல்—
கரையுடைத்துப் பாயும் புது வெள்ளம்;
அதில் தெளிவிருக்காது.
முதுமைக்காதல் —
தெளிந்து சலசலத்து ஓடும் நீரோடை!
அந் நீரோடையின் இதயத்தில் கூழாங்கல்லும்
மின்னும் கிளிஞ்சலும்,
வண்ண வேறுபாட்டோடு படிந்துகிடக்கும்
பொடிமணலும்கூடக் கண்ணுக்குப் புலப்படும்.

வாழ்க்கையின் அந்திநேரம்
கையில் விளக்கோடு வருகிறது—
வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கைகளே
ஐம்பது வயதுக்குமேல்தான் புரியத் தொடங்குகின்றன.
மேலைநாட்டில் அறிஞர்கள்
ஐம்பது வயதில்தான்
திருமணமே செய்து கொள்கிறார்கள்.
ஆனால்—
இந்திய நாட்டுப் பொருளாதாரமும்
தட்டவெட்ப நிலையும்
நம் முதுமைப் பருவத்தைக் கணிசமாகக்
குறைத்து விடுகின்றன.''
என்றான் அவன்.
''விதி விலக்குகள் எப்போதும்;
பொதுச் சட்டம் ஆவதில்லை;
உங்கள் பெற்றோர்களைப் போல
எல்லா முதியவர்களும் இருக்கிறார்களா?''
என்று கேட்டாள் அவள்.
''எதிர்காலத்தில் வர இருக்கும்
முதுமையைக் கருத்தில் கொண்டு
யார் திட்டமிட்டு வாழ்கிறார்கள்.
அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள்.
வாழ்க்கையில் பொருளாதாரம்
மிகவும் இன்றியமையாதது.
வறுமை —
சில முதிய தம்பதியர் வாழ்க்கையைக்

கசப்பாக்கி விடுகிறது.
பிள்ளைகளை நம்பித்தான் வாழவேண்டும்
என்ற நிலைமையில் உள்ள முதியவர்கள் சிலர்
துன்பம் அடைகிறார்கள்.
அந்நிலை பிள்ளைகளின் பண்பாட்டைப் பொறுத்தது"
என்றான் அவன்.
"நீங்கள் என்னதான் சொன்னாலும்
இளமையோடு கூடிய இனக்கவர்ச்சித்தான்
குடும்ப வாழ்க்கையின் அடிப்படைப் பிணைப்பு
என்று நான் கருதுகிறேன்.
இளமை நீங்கியதும்
இனக்கவர்ச்சியும் குறைந்து விடுகிறது.
சுவையற்றதாகிக்
குடும்பவாழ்வும் கசந்துவிடுகிறது!"
என்றாள் அவள்.
"முதுமையில் இனக்கவர்ச்சி
குறைந்துவிடுவதாகக் கருதுவது தவறு.
கணவன் மனைவியரிடை உள்ள
காதலுணர்வும் முதுமையில் குறைவதில்லை!
அந்தக் காதலை நுகரும் முறைதான் மாறுபடுகிறது.
முதுமையிலும் காதலுணர்வு குறையாமல்
வாழும் குடும்ப வாழ்க்கைதான் வெற்றி வாழ்க்கை!
இதை அந்தக் காலத்திலேயே —
ஔவையார் நுட்பமாக ஒரு பாடலில்

குறிப்பிட்டுள்ளார்'' — என்றான் அவன்.

''என்ன அந்தப் பாடல்?''

என்று கேட்டாள் அவள்.

ஒரு திருமணத்தில் மணமக்களை
வாழ்த்தும் பொறுப்பு ஔவையாருக்கு
அளிக்கப்பட்டது. ஔவையார்
தமிழகத்தைக் காலாலே அளந்தவர்.
மக்கள் வாழ்க்கையின்
அடிப்படைக் கூறுகளை நன்கு உணர்ந்தவர்.
காதல் வயப்பட்ட மணமக்கள்
கடைசிவரை அவ்வுணர்வு குன்றாமல்
வாழ்வதே சிறப்பு என்பதை
அவர்களுக்கு உணர்த்த விரும்பினார் அவர்.
ஒரு பெண்ணின் இளமை
அவள் மார்பின் எழுச்சியை வைத்தே
மதிக்கப் படுகிறது.
அந்த மார்பையே —
காதலுக்கு அளவு கோலாக
வைத்துப் பாடுகிறார்.
அரன்பதி கயிலாய மலை!
இது பெண்ணின் மார்புக்கு உருவகம்.
ஆயன்பதி ஆலிலை! (திருமால் உறங்கிய, ஊழியில்
மிதந்த ஆலிலை)
இது பெண்ணின் அடிவயிற்றுக்கு உருவகம்.
கன்னிப் பருவத்தில் —

கயிலாயமாய் நிமிர்ந்திருக்கும் மார்பு
முதுமையில் கட்டுக் குலைந்து
நீண்டு தொங்கி
அடிவயிற்றில் மோதுகிறது.
இந்த முதிய நிலையிலும் —
கைப்பிடித்த அன்று ஒருவன் மனைவியை
எப்படி ஆர்வத்தோடு காதலித்தானோ
அப்படியே காதலிக்க வேண்டும் —
என்பது அவர் வாழ்த்துப்பாவின் கருத்து.

ஆயன்பதியில் அரன்பதிவந் துற்றளகம்
மாயன்னூ துங்கருவி யானாலும் — தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையாள் தன்னுடனீர்
இன்றுபோல் என்றும் இரும்.

இதுதான் அப்பாடல்'' என்று கூறினான் அவன்.
''குடும்ப வாழ்வின் உயிர் நாடியான கருத்தை
இவ்வளவு சுருக்கமாக, அழகாக
ஔவையார் போன்ற பெரியோர்களே
திருமண வாழ்த்தாக எடுத்துரைக்க முடியும்.
இப்பாடலின் நுட்பம் வியக்கத்தக்கது!''
என்றாள் அவள்.
''பாவேந்தர் குடும்ப விளக்கின் தலைவியும்
இதைத்தான் தனது
முதிர்ந்த நிலையில் குறிப்பிடுகிறாள்.
தலைவி தங்கம் புதுமலர் அல்லள்!,

காய்ந்த புற்கட்டே அவள் உடம்பு;
அவள் சதிராடும் நடையாள் அல்லள்;
தள்ளாடி விழும் மூதாட்டி.
சருகாகித் தளர்ந்த இந்த நிலையிலும்
கணவன் மீது, தான் கொண்டிருந்த
காதல் எத்தகையது என்பதைப் புலபடுத்தும்போது,

அறம்செய்த கையும் ஓயும்!
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்!
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம்கேட்ட காதும் ஓயும்!
செயல்கண்ட கையும் ஓயும்?
மறவனைச் சுமக்கும் என்றன்
மனமட்டும் ஓய்தல் இல்லை!

என்று குன்றாத தன் காதல் உணர்வைக் கூறிக்
காட்டுகிறாள்'' என்றான் அவன்.
''உண்மைதான்,
முதுமையில் காதலுணர்வு
உள்ளத்தளவில் நிறைவு கொள்ளுகிறது''
என்று கூறிச் சிரித்தாள் அவள்.
''வளியிடை போழப்படா முயக்கு
வாழ்நாள் எல்லாம் வாய்க்குமா என்ன?
அதே குடும்ப விளக்குத் தலைவி,
இரவில் மகனும் மருமகளும் துயின்ற பிறகு
நடக்க முடியாத நிலையில், இருட்டில்,
தரையில் தவழ்ந்து போய்
கணவன் படுக்கையில் சாய்கிறாள்.

இதைப் பாவேந்தர், உள்ளத்தைத்
தொடும் வகையில்,

> **வருகின்றா யோடி தங்கம் !**
> **வாஎன்றோர் ஒலிகேட் கின்றாள்,**
> **சருகொன்று காற்றால் வந்து**
> **வீழ்ந்தது போலே, தங்கப்**
> **பெரியாளும் பெரியான் அண்டைத்**
> **தலையணை மீது சாய்ந்தாள்.**
> **அருகருகு இருவர், மிக்க**
> **அன்புண்டு; செயல்தான் இல்லை !**

என்று பாடுகிறார்.
அரண்மனைக் கட்டுக் காவலைக்
கடந்து சந்தித்த
அம்பிகாபதி அமராவதியின் காதல் வேகம்
இந்த எழுபது வயது முதியவர் இடையில்
இல்லாமலா போயிற்று ?
அதனால் தான் —
காதலுக்கு வயதில்லை என்று சொன்னேன்''
என்று கூறினான் அவன்.
''அன்புண்டு; செயல்தான் இல்லை, —
என்ற வரிகள் மிகவும் நுணுக்கம்
என்றாள் அவள்.
''உண்மைதான் !
இதுமயில் காதல்''
என்றான் அவன்.
''அப்படியென்றால் !

புரியும்படி சொல்லுங்கள்!''
என்று ஆவலோடு கேட்டாள் அவள்.
''மயிலின் காதலைப்பற்றி
ஒரு கற்பனை வழக்கு ஒன்று உண்டு.
இதை, இன்றைய உயிரியல் வல்லுநர்கள்
ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். என்றாலும்,
உனக்குக் கூறுகிறேன்.
மயில்கள் உடலுறவில்லாமல்
கண்களாலேயே காதலை நுகருமாம்.
அந்த உணர்ச்சி வேகத்தில்
ஆண் மயிலுக்கு வீரியம் கீழே கொட்டிவிடுமாம்.
பெண் மயில் அதை எடுத்து விழுங்கிக்
கருவுறுமாம்.
இங்கும் அன்புண்டு; செயல்தான் இல்லை''
என்று கூறிச் சிரித்தான் அவன்.
''நீங்கள் கூறுவதைப் பார்த்தால்
செயல் இருக்கிறதோ இல்லையோ.
ஓர் ஆடவனுக்கு —
அவன் இறக்கும் வரையில்
மனைவி அருகில் இருக்க வேண்டும் போலிருக்கிறது!''
என்றாள் அவள்.
''உண்மைதான்!''
''மக்களும் மருமக்களும்
எவ்வளவுதான் அன்புடையவர்களாக இருந்தாலும்

முதிர்ந்த கணவனுக்கு
நீண்ட நாள் உடன் வாழ்ந்த
அவன் மனைவிதான்
குறிப்பறிந்து பணிவிடை செய்ய முடியும்
கணவனுடைய உணவுப் பழக்கமும்
விருப்பு வெறுப்புகளும்
மனைவிக்குத்தான் அத்துபடி !
அண்மையில் மேலை நாட்டில்
ஒரு கணக்கெடுப்பு நடத்தினர்.
துணையிழந்த முதிய ஆண் பெண்களுள்
நீண்ட நாள் வாழ்பவர் யார் என்று பார்த்ததில்
பெண்களே நீண்டநாள் வாழ்கின்றனர்;
ஆடவர்கள் மனைவியிறந்ததும் சீக்கிரம் இறந்து விடுகின்றனர்.
ஏனென்றால்,
மனைவியின் அன்புப் பணிவிடையை
நம்பியே வாழ்பவர்கள் ஆடவர்கள்!
மனைவி இறந்ததும் —
அவர்கள், அன்புக்கு ஏங்கும்
அனாதைகள் ஆகிவிடுகிறார்கள்.
அந்த ஏக்கமே அவர்களைச், சீக்கிரம்
கொன்றுவிடுகிறது.
ஆனால் பெண்கள் —
அன்பைப் பிறருக்கு வழங்கியே பழக்கப்பட்டவர்கள்!

கணவன் இறந்ததும்
தங்கள் அன்பைப்
பேரக் குழந்தைகள்பால்
அவர்களால் இடம் மாற்றிக் கொள்ள முடியும்''
என்றான் அவன்.
நீங்கள் கூறுவதை —
நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்.
''கொண்டவற் கெதுபிடிக்கும்'' என்று
குலக்கொடியளுக்குத்தான் தெரியும்!'' என்றாள்
அவள்.

— முற்றும் —

கவிதை :

1) தீர்த்தக் கரையினிலே
2) கடை திறப்பு
3) பனித்துளிகள்
(தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற்பரிசு பெற்ற நூல்)

வரலாற்றுக் கட்டுரை :

4) பாவேந்தர் நினைவுகள்

தொகுப்பு நூல்கள் :

5) அரும்புகள் மொட்டுகள் மலர்கள்
6) குயில் கூவிக் கொண்டிருக்கும்
7) புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்

Wrapper Printed at : Eskay Art Printers, Madras-5.
Designed by : Thiru. P. N. Anandan